Approved by the Text-Book Committee, of Madras for Class use.
Vide page 257 of Part I-B of Fort St. George Gazette of 16-4-1935.

திருமகள் வாசகம்

ஐந்தாம் புத்தகம்.

WITH A FOREWORD BY

S. ANAVARATAVINAYAKAM PILLAI,
Reader in Tamil, University of Madras.

நியூ இந்தியா டிரேடிங் கம்பெனி,
ஜி. டி. மதராஸ்.

பதிப்புரிமை] 1934. [விலை அணா 6

திருமகள் வாசகம்

ஐந்தாம் புத்தகம்.

TIRUMAGAL VACHAKAM

(FIFTH READER)

TAMIL

WITH A FOREWORD BY

S. ANAVARATAVINAYAKAM PILLAI,
Reader in Tamil, University of Madras.

நியூ இந்தியா டிரேடிங் கம்பெனி,
ஜி. டி. மதராஸ்.
பதிப்புரிமை] 1934 [விலை அணா 6

FOREWORD

I have read the New Series of Tamil Readers known as the Tirumagal Vachakam, Books Third to Fifth, with considerable interest. The subject-matter and language of the books are adapted to the standards for which they are intended. The subject dealt with in the Readers are varied and just suitable for study by pupils of the Elementary Schools. Stories, accounts of ancient Tamil celebrities, description of natural objects, animals, birds etc., form the subject-matter of the lessons. One chief feature seems to be that the subjects are all Indian. The language employed is simple and faultless. There are also suitable illustrations in most of the lessons. Some pages are devoted to simple pieces of poetry which are fairly representative. I have no doubt that these readers will become popular and be widely used in the schools of the Tamil country.

Limbdi Gardens,
Royapettah,
22-11-1934.

S. Anavaratavinayakam Pillai,
Reader in Tamil,
University of Madras.

பொருள் அடக்கம்.

1. கடவுள்.
2. திருஞான சம்பந்தர்.
3. சிங்கம்.
4. ஔவையார்.
5. ஔவை தனிப்பாடல். (பாடல்)
6. கல்வி.
7. ஹைதர் ஆலி.
8. சேரமான் கணைக்காலிரும் பொறை.
9. ஆங்கில அரசாட்சியின் பலன்.
10. பனைமரம்.
11. ரிப்பன் பிரபு.
12. தமிழருமை.
13. தமிழ்ப் பாஷைச் சிறப்பு. (பாடல்)
14. ஏழாம் எட்வர்ட் அரசர்.
15. இராமானுஜர்.
16. பருவ காலங்கள்.

17. செட்டியார் தானம் பண்ணினது.

18. நமது மூதாட்டியின் அரிய உரைகள். (பாடல்)

19. தண்ணீர்.

20. ஏரோப் பிளேன் என்னும் ஆகாய விமானம்.

21. கொள்ளை நோய்களைத் தடுப்ப தெப்படி.

22. மனிததேகம் நிலையற்றது. (பாடல்)

23. சப்மரீன் என்கிற மூழ்கும் கப்பல்கள்.

24. குமணன்.

25. தெய்வ வணக்கத்துக்குரிய பாக்கள். (பாடல்)

செய்யுட் பாடம்.

26. மூதுரை.

27. நல் வழி.

திருமகள் வாசகம்

ஐந்தாம் புத்தகம்

---

1. கடவுள்.

1. உலகத்தையும் அதிலுள்ள எல்லாப் பொருள்களையும் உற்றுநோக்கும்போது, இவையனைத்தும் எவ்வாறு உண்டாயின என்னும் வினு நமது உள்ளத்தில் தோன்றுகின்றது. ஒரு மரத்தைக் கவனித்துப் பாருங்கள். அது வானுற ஓங்கி வளர்ந்து இலை, தளிர், பூ, காய் முதலியவை நிறைந்து விளங்கவில்லையா? அது, சிறியதொரு விதையிலிருந்து முளைத்து வர வரப் பெரிதாக வளர்ந்து உயர்ந்த மரமாய் நிற்கின்றது. ஓர் ஆலமரம் எவ்வளவோ பெரிதாக வளர்கிறது. அது, முதலில் கடுகைக் காட்டிலும் சிறிய வித்திலிருந்து தோன்றி வளர்ந்து நால்வகைப் படையுடன் அரசர்கள் தங்கியிருத்தற்குரிய மிகப் பெரியமரமாகி நிற்கிறது. இஃது எவ்வளவு ஆச்சரியம்!

2. நம்மைச் சுற்றியுள்ள பல்வேறு பொருள்களைக் கவனிப்போம். தரையில் நடமாடும் விலங்குகளைப் பாருங்கள்; அவை புல், தழை, மாமிசம் முதலியவைகளைத்தின்று தங்கள் இனத்தைப் பெருகச் செய்து

கொண்டு பூமியில் வசிக்கின்றன. பறவைகள் ஆகாயத்திற் பறந்து தத்தம் இயற்கைப்படி வழக்கமான உணவையுண்டு வாழ்கின்றன; அவைகளுக்கு இரை எப்படிக் கிடைக்கிறது?

3. நீரில் வாழும் பிராணிகள் எவ்வளவென்று கணக்கிடமுடியுமா? அவைகள் எப்படி உன்டாயின? அவைகளுக்கு எங்கிருந்து இரை கிடைக்கிறது? அவைகளைக் காப்பாற்றுபவர் யார்? அவைகள் எவ்வாறு தம் இனத்தை வளர்க்கின்றன.

4. கடலை நோக்குங்கள்; அஃது, எவ்வளவு பரந்த இடத்தைக் கவர்ந்திருக்கிறது. அது, கரைகடவாமல் ஒரு எல்லைக்குள் அடங்கிநிற்கிறதே. அது கரைகடந்து பெருகினால் இவ்வுலகம் நிலைத்து நிற்குமா? உலகமும் அதிலுள்ள பொருள்களும் நீரில் மூழ்கி அழிந்து விடுமல்லவா? அப்படி நேராதபடி சமுத்திரத்தை எல்லைக்கு உட்படுத்தி வைத்திருப்பவர் யார்?

5. வானத்தைச் சிறிது நேரம் உற்றுப் பாருங்கள். சூரிய சந்திரரும் எண்ணிறந்த நட்சத்திரங்களும் அங்கு விளங்குகின்றனவே. சூரியன் நிலையாய் நிற்க, கிரகங்கள் அதைச் சுற்றி வருகின்றன. கிரகங்கள் தவிர, பல நட்சத்திரங்களும் சுற்றி வருகின்றன. இவை ஒவ்வொன்றிற்கும் செல்லவேண்டிய பாதை தனித்தனியுண்டு. அவ்வழிகளிலே அவை செல்கின்றன. அவை, தமக்கென்றமைந்த பாதைகளினின்றும் விலகி, வேறு பாதையிற் செல்லாமல் கட்டுப்படுத்தி யிருப்பவர் யார்?

6. நாம் உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும் இவ்வாறு ஆராயும்போது, இவைகளுக்கெல்லாம் காரண

கர்த்தா ஒருவர் இருக்க வேண்டுமென்று நமக்குத் தோன்றுவது இயல்பல்லவா? அவரையே நாம் கடவுள் என்கிறோம். கடவுள் என்பது, கட உள் எனப் பிரியும். அஃதாவது, மனிதர் மன மொழி மெய்களுக்கு எட்டாதவர் என்று பொருளாம்.

7. கடவுள் ஒருவருண்டு; பல கடவுள் இல்லை. ஒன்றாயுள்ள கடவுளைப் பற்பல சமயத்தாரும் வெவ்வேறு பெயரிட்டு அழைக்கின்றனர்; ஆயினும் அவர் ஒருவரே. அவரை நாம் காண முடியாது. அவருக்கு வடிவம் இல்லை. ஆகையால் அவரை உருவமற்றவர் என்றும் கூறுவர். அவர் வாயுவைப் போல் எங்கும் நிறைந்து எல்லாப் பொருள்களிலும் கலந்திருக்கிறார்; அவர் இல்லாத இடமே இல்லை. அவர் தூணிலும் இருப்பார்; துரும்பிலும் இருப்பார். உலகத்தையும் அதிலுள்ள சராசரங்களையும் படைத்தவர் அவரே. அவர் எல்லாம் வல்லவர்; எல்லாமறிந்தவர்; அவருக்கு இல்லாத சக்தி உலகில் இல்லை.

8. அவர் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் முக்கால நிகழ்ச்சிகளையும் முற்ற உணர்ந்தவர். அவர் அறியாத விஷயங்கள் ஒன்றுமேயில்லை. பிறரறியாமல் நாம் செய்யும் செயல்களையும் அவர் அறிவார். மனத்தில் நினைக்கிற நினைவுகளையும் அவர் தெரிந்து கொள்ளுகிறார்.

9. கடவுள் நம்மிடம் மிக்க அருளுடையவர். அவ்வருளாலேயே அவர், இவ்வுலகத்தையும் சராசரங்களையும் படைத்து நமக்கு உதவுகிறார். நம்மை இன்பத்தோடும் பலத்தோடும் காப்பாற்றிவருகிறார். விழித்த கண் மூடாமல் நம்மைப் பார்த்த வண்ணமே இருக்கிறார். இவ்வித கருணைக்கு நாம் எந்த வழியிற் கைம்மாறு செய்ய

முடியும்? அவர் நம்மைப் பொருள் கேட்கிருரா? இல்லை, பின் என்ன?

10. நாம் கடவுளை, பக்தியுடன் வணங்கவேண்டும். நாம் அவரை எப்பொழுதும் உள்ளன்போடு துதிக்கவேண்டும். அவரை வாழ்த்தும்போதெல்லாம் நாம் பேரின்பம் அடைகிருேம். நாம் கடவுளை வாழ்த்துவது நமது நன்மைக்கேயன்றி அவருக்கு ஒருபயன் உண்டாவதற்காகவன்று.

11. எவ்விதத் துன்பம் நமக்கு நேரிட்டபோதிலும் நாம் கடவுளைத் தொழுதலை மறத்தலாகாது. அவரை வழிபடுதல் நமக்கு உரிய கடமையாகும். நாம் கடவுளை உள்ளன்போடு நம்பித் துதிக்கவேண்டும். கடவுளை நம்புகிறவர், நல்லொழுக்கமும், உண்மையுமுடையவராய் இருத்தல் நலம். சிலர், பிறர் மெச்சப் பூஜை ஜபம் முதலியவைகளைச் செய்கிருர்கள். இதனுல் பலன் எதுவுமுண்டாவதில்லை. அப்படிப்பட்டவர் செய்யும் வணக்கங்களையும், பூஜைகளையும் கடவுள் ஏற்றுக் கொள்ளுவதில்லை. உண்மையாய் நம்புகிறவர்களை அவர் கைவிடுவதில்லை. கடவுளை நம்பினேர் கைவிடப்படார் என்பது பழமொழியன்றே?

---

2. திருஞான சம்பந்தர்.

1. சோழநாடு என்பது, தென்னிந்தியாவிலே முக்கிய பாகங்களில் ஒன்று. அது நீர்வளம் நிலவளம் குடிவளம் முதலிய பல வளங்களையுமுடையது. எல்லாச் செல்வங்களுக்கும் உறைவிடமாயுள்ளது. அங்கு, தானியங்கள் அனைத்தும் நன்ருய் விளையும்; ஆகையால்தான் "சோழ வளநாடு சோறுடைத்து" என்று ஒளவையார் கூறலாயினர்.

2. இவ்விதச் சிறப்பமைந்த சோழ நாட்டிலே சீகாழி என்னுமோர் தலமுண்டு அங்கு நீண்ட காலத்திற்கு முன்னே சிவபாதவிதயர் என்ற பெயருள்ள அந்தணர்



இருந்தார். அவர் மனைவிக்குப் பகவதியார் என்று பெயர். அவர்கள் சிவபெருமானிடத்தில் என்றும் நீங்காத பத்தி யுடையவர்கள். அவர்களுக்கு ஒரு குமாரர் பிறந்தார். அவரை அருமை பெருமையுடன் அவர்கள் வளர்த்து வந்தார்கள்.

3. ஒருநாள் சிவபாதவிதயர் நீராடும்பொருட்டுக் குளத்திற்குச் சென்றார். குமாரரும் அவரோடு சென்று அவர் ஸ்நானம்பண்ணி முடியும்வரையில் குளக்கரை யில் காத்திருக்க நேர்ந்தது. தகப்பனர் நீரில் மூழ்கினர். அப்பொழுது சிறுவர், தந்தையைக்காணது பசியோடு அம்மா ! அப்பா ! என்று கூவி அழுதனர்.

4. சமீபத்திலுள்ள கோயிலில் எழுந்தருளியிருந்த சிவபெருமானும் பார்வதிதேவியும் குழந்தையின் அழு குரலைக் கேட்டு, அவ்விடத்துக்கு வந்தார்கள். பார்வதிதேவியார், குழந்தையின் அழுகையை நிறுத்தக் கருதி, பொற்கிண்ணத்தில் பாலைக்கறந்து குழந்தைக்கு ஊட்டினர். குழந்தை அப்பாலை உண்டபின் ஆனந்தமடைந்தது.

5. இதற்குள் சிவபாதவிதயர் காலைக்கடனை முடித்துக்கொண்டு குழந்தை யிருக்கும் இடம் வந்தார். அவர் குழந்தையின் உதடுகளில் பாலொழுகுவதைக் கண்டு "நீ யார்கொடுத்த பாலை அருந்தினாய்?" என்று கூறி, ஒரு சிறு கழியால் குழந்தையை அடிக்க முயன்றார். உடனே குழந்தை, வானைச் சுட்டிக்காட்டி ஒருபாடலைப் பாடிற்று. பார்வதிதேவியின்பாலை உண்டபின் அவருக்குச் சிவஞானம் உண்டாயிற்று; அவர் பாடிய பாட்டால் சிவபெருமானும் பார்வதிதேவியுமே தமக்குப் பால் ஊட்டியவர்கள் என்று குறிப்பித்தார். அதுமுதல் அவருக்கு ஞானசம்பந்தர் என்ற பெயர் வழங்கலாயிற்று.

6. சிவபாதவிதயர், இவை சிவபெருமான் திருவருட் செயலென்று உணர்ந்து மகிழ்ந்தனர். அன்றுமுதல் சிறுவரான ஞானசம்பந்தர், தமிழ் நாட்டிலுள்ள தலங்கள்தோறும் சென்று பத்திச்சுவை சொட்டும் பாடல்களைப் பாடினர். அப்பாடல்களின் தொகுதிக்குத் தேவாரம் என்று பெயர்.

7. சம்பந்தர், சிறுவரா யிருந்தமையால் தலங்கள் தோறும் நடந்து செல்ல அவருக்குச் சக்தியில்லை; ஆகையால் அவருடைய தந்தை அவரைத் தமது தோளின்மேல் தூக்கிக்கொண்டு செல்வது வழக்கம்; இவ்விதம் அவர்

திருக்கோலக்கா, திருநனிபள்ளி முதலிய பல தலங்களுக்குச் சென்று திருப்பதிகங்களைப் பாடினர். திருக்கோலக்காவில் சிவபெருமான் திருவருளால் அவருக்குப் பொற்றாளங்கள் கிடைத்தன.

8. திருநீலகண்டப் பெரும்பாணர் என்னும் சிவ பக்தர், சம்பந்தரைப்பற்றிக் கேள்விப்பட்டுச் சீகாழிக்கு வந்து அவரை வணங்கினர். அதுமுதல் அவர், ஞானசம்பந்தருடன் சென்று அவர் தலங்கடோறும் பாடும் பாட்டுக்களை வீணையில் வாசித்து வந்தார். பிறகு ஞானசம்பந்தர் சிதம்பரம் திருவெருக்கத்தம்புலியூர் முதலிய பல தலங்களையும் தரிசித்தார். பின்னர், திருவரத்துறை என்னும் தலத்திற்குச் செல்ல விரும்பினர்.

9. ஞானசம்பந்தருடைய மேன்மையை யறிந்து அவ்வூர்ச் சிவபெருமான், அவருக்கு முத்துச்சிவிகை முத்துக்குடை முத்துச்சின்னம் முதலியவைகளைக் கொடுத்து அவரைச் சிறப்பித்தினர். அவர் எங்குச் சென்றாலும் சிவனடியார்கள் அவருக்குச் சிறந்த மரியாதை செய்தார்கள். அவர் சென்ற விடமெல்லாம் சிறப்படைந்தார்.

10. அக்காலத்தில் இருந்த பாண்டியவரசனுக்கு நெடுமாறன் என்று பெயர். அவன் சமணமதப் பற்று உடையவன். அவனுடைய குடிகளும் சமணராயினர். 'அரசன் எவ்வழி அவ்வழிக் குடிகள்' என்பது உண்மையே யன்றோ? அவ்வரசனுடைய மனைவிக்கு மங்கையர்க்கரசி என்றும், மந்திரிக்குக் குலச்சிறை என்றும் பெயர் வழங்கலாயிற்று; அவர்கள் இருவரும் சைவமதத்தினர்.

11. அவர்கள் ஞானசம்பந்தரின் சிறப்பைப் பலராற் கேள்விப்பட்டு அவரை மதுரைக்கு வரவழைத்தார்

கள். சம்பந்தர் அங்குச்சென்று ஒருமடத்தில் தங்கினர். சைவப்பகைவரான சமணர், அம்மடத்திற்குத் தீயிட்டார்கள். சிவபெருமான் திருவருளால், திருஞானசம்பந்தருக்கும், அவரைச்சேர்ந்த அடியாருக்கும் எவ்விதமான தீங்கும் நேரவில்லை.

12. ஞானசம்பந்தர், தம்மடத்தில் தீவைத்தவர் சைனரேயென்று அறிந்து கொண்டார், அவர் சைனரை ஆதரிக்கும் அரசனுக்கு வெப்புநோய் காணவேண்டுமென்று சிவபெருமானைத் தியானித்து ஒருபதிகம் பாடினர். உடனே அரசனுக்குக் கொடிய சுரம் கண்டது. சமணர், அந்நோயைத் தீர்க்க மணி மந்திர ஔடதங்களைக்கொண்டு முயன்றார்கள்; எனினும், அரசன் குணமடையவில்லை. பிறகு திருஞானசம்பந்தரை அழைத்துக் காண்பித்தார்கள். அவர் அரசனுடைய உடலில் விபூதியைப் பூசி, பஞ்சாக்கரமந்திரத்தை ஜபித்தார்; சுரம் உடனே நீங்கிற்று. சம்பந்தருக்கும் சமணருக்கும் வேறுபல வாதங்கள் நிகழ்ந்தன; முடிவில் அரசன் சமணமதத்தை விடுத்துச் சைவமதத்தைத் தழுவினன்.

13. ஆயினும் சமணர்களுக்குச் சைவமதத்தில் நம்பிக்கை ஏற்படவில்லை. அவர்கள் சம்பந்தரைப் பலவிதப் பரீட்சை செய்தனர்; அவற்றிலெல்லாம் சம்பந்தரே வெற்றிபெற்றார்; ஆகையால் பாண்டிநாட்டுக்குடிகள் யாவரும் சைவராயினர். சமணர், சம்பந்தரோடு செய்த ஒப்பந்தப்படி கழுவில் ஏறி உயிரிழந்தனர். தம் மதத்திற்காக உயிர் விடுவதை அவர்கள் பொருட்படுத்தவில்லை.

14. சம்பந்தர் மீண்டும் பற்பல ஸ்தலங்களைத் தரிசித்து அற்புதங்களைச் செய்து வந்தார். அக்காலத்தில்

சிவபாதவிதயர் சம்பந்தருக்குத் திருமணம் செய்விக்க எண்ணினர் ; ஆகையால் அவர் திருநல்லூர் நம்பியார் புத்திரியை விவாகம் செய்விக்க நிச்சயித்தார். வேதவிதிப்படி விவாகச் சடங்குகள் நிறைவேறின. சம்பந்தர் அக்கினியை வலம் வந்தார். பிறகு திருப்பெருமணம் என்னும் சிவஸ்தலத்துக்குச் சென்றார். அங்கு, சிவபெருமான் சோதி வடிவமாக விளங்கக் கண்டார். உடனே திருஞானசம்பந்தர் திருமணத்திற்கு வந்திருந்த அனைவருடனும் அச்சோதியிற்கலந்து பேரின்ப வாழ்வை யடைந்தனர்.

---

3. சிங்கம்.

1. சிங்கம், விலங்குகளுக்குள் சிறந்த பலமும் வீரமுமுடைய பிராணி. ஆகையால், அதற்கு மிருகேந்திரன் என்ற பெயர் வழங்குகின்றது. மிருகேந்திரன் என்றால் மிருகங்களுக்கு அரசன் என்பது பொருள். அது பூனை இனத்தைச் சேர்ந்தது. பூனை, சிங்கம், புலி, சிறுத்தை இவைகள் ஒரே தன்மையுடையவை.

2. சிங்கம், பெரும்பாலும் உஷ்ண தேசங்களில் வாழ்வது. அஃது ஆப்பிரிக்காக் கண்டத்தின் மத்திய பாகத்திலும், ஆசியாக் கண்டத்தின் உஷ்ண தேசங்களிலும், அரேபியா, பாரசீகம் முதலிய தேசங்களிலும் காணப்படுகிறது. நமது தேசத்தின் வட பாகத்திலுள்ள காடுகளிலும் சிங்கத்தைச் சில சமயங்களிற் காணலாம்.

3. சிங்கம், பொதுவாக நான்கடி உயரமுதல் ஏழு அல்லது எட்டடி உயரம் வரையில் வளரும். அதன் உடல் முழுவதும் வெண்மை கலந்த கபிலநிறமாக இருக்கும்.

அதன் வயிறும் மார்பும் உரோமத்தால் மூடப்பட்டிருக்கும். சிங்கத்தின் முகத்தில் நீண்ட மீசை உண்டு. அவை பரிச வுணர்ச்சிக்குரிய உறுப்புக்களாகப் பயன்படுகின்றன. அது இரவில் இரை தேடச் செல்லும்போது, பாதையிலுள்ள மரம், செடி, தழை முதலியவை தன்மீது படாமல் வழி தெரிந்து மெல்லச் செல்லுகிறது.



4. ஆண் சிங்கம், பெண் சிங்கத்தை விடப் பெரியது. அதற்கு உச்சந் தலையிலிருந்து பின் கழுத்து வரையில் மயிர் நீள வளர்ந்து தொங்கிக் கொண்டிருக்கும். அது பிடரிமயிர் என்று சொல்லப்படும். சடைத்துச் சுருண்ட தலை மயிரும், விருப்பப்படி சிலுப்பக்கூடிய பிடரி மயிரும், நெருப்புப் பொறி போலப் பளீர் பளீரென்று விளங்கும் கண்களும், அகன்ற வாயும், கூரிய பற்களும் பார்த்த எந்த விலங்கையும் நடுங்கச் செய்யும்.

5. சிங்கத்தின் செவிகள் சிறியனவாயும் வட்டமாயும் இருக்கும்; ஆயினும் அவை மிக நுட்பமான ஒலியையும் கேட்கும் இயல்புடையன. ஆதலால் எந்தச் சிறிய சத்தத்தையும் சிங்கம் எளிதிற் கேட்டுணரும். சிங்கத்தின் கால்கள் பலமுடையவை. அது தன் முன்னங்காலால் பலமுள்ள எந்தப் பிராணியையும் ஒரே அறையாக அறைந்து கொன்றுவிடும். அதன் பாதத்தில் நீண்டு வளைந்த கூர்மையான நகங்களுண்டு. அந்நகங்களை அது வேண்டும்போது நீட்டவும் வேண்டாதபோது உள்ளே இழுத்துக் கொள்ளவும் கூடும். அதன் உள்ளங்கால் நடுவில் சதை வளர்ந்து மெத்தென்று இருக்கும். ஆகையால் சிங்கம் நடந்து வரும்போது எவ்விதச் சத்தமும் பிறருக்குக் கேட்பதில்லை.

6. சிங்கத்தின் வால் சுமார் நான்கடி நீளமுள்ளது. அதன் நுனியில் சடைத்த மயிர் முடிச்சு ஒன்றுண்டு. வால் மிக்க பலமுடையது. வால் வீச்சினாலேயே மிக்க உரமுள்ள ஒரு மனிதனையும் அது கீழே தள்ளிவிடும்.

7. பெண் சிங்கம், ஆண் சிங்கத்தைக் காட்டிலும் சிறியது. அதற்குப் பிடரி மயிர் இல்லை. அஃது ஆண்டிற்கு ஒருமுறை குட்டிபோடும். ஒருமுறை இரண்டு அல்லது மூன்று குட்டிகளையே பெறும். பெண் சிங்கம், குட்டிபோட்டிருக்கும்போது மிக்க கோபங்கொண்டிருக்கும். அப்பொழுது சமீபத்திற் செல்லும் பிராணிகள் எதையும் அது கொன்றுவிடும். தன் குட்டிகளை எந்தப் பிராணியும் துன்புறுத்தாதபடி அது ஜாக்கிரதையுடனிருக்கும்.

8. சிங்கம் மாமிசம் உண்பது. அதன் உடல் அமைப்பே, பிற பிராணிகளை அடித்துத் தின்ன ஏற்படுத்-

தப் பட்டிருப்பது போல் தோன்றுகிறது. அஃது, ஆற்றங் கரையில் வளர்ந்திருக்கும் புதர்களுக்குள் மறைந்திருந்து, நீருண்த வரும் பிராணிகளை அடித்துத் தின்னும். சிங்கத்தினிடத்தில் மேலான குணங்கள் சில உண்டு. அஃது எந்தப் பிராணியையும் வருத்திக் கொல்லாது. அது, தான் இரையாகக் கருதும் விலங்கின்மீது ஒரே தடவை தான் பாயும். அது தப்பி ஓடிவிட்டால் அதைத் தொடர்ந்து செல்லாது. பிறர் அடித்துக் கொன்று தின்ற இரையின் மிகுதியையும், ஒருதரம் தின்று மிகுந்த மாமிசத்தையும் அது தின்னாது. ஆகையால் சிங்கம் மேலான பிராணிதான். இதனாலேயே ஆங்கிலேயர் சிங்கத்தின் உருவத்தைத் தங்கள் கொடியில் தீட்டி யிருக்கிறார்கள்.

---

4. ஔவையார்.

1. சிறுவர்களே! நீங்கள் ஔவையார் என்ற பெயரைக் கேட்டிருப்பீர்களே. அவரே ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை முதலிய நீதி நூல்களைச் செய்தவர். அவர், தமிழை நன்றாய்க் கற்ற மூதாட்டியார். அவர் வரலாற்றை நீங்கள் அறிவது நலமாகும்.

2. ஔவையாரின் தந்தை பெயர் பகவன். தாயின் பெயர் ஆதி. பகவன் உயர்குலத்தவன்; ஆயினும் விதிவசத்தால் ஆதியை விவாகம் செய்துகொண்டான்; பின்னர் அவர்களிருவரும் தேசசஞ்சாரம் செய்யலாயினர். அவர்கள் தங்களுக்குக் குழந்தை பிறந்தால் அக் குழந்தையைப் பிறந்த விடத்திலேயே விட்டுச் செல்வதென்று தங்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அவர்களுக்கு

முதலில் ஒரு பெண் குழந்தை பிறந்தது; அக்குழந்தையே ஔவையார்.

3. ஔவையாகிய குழந்தை பிறந்தவுடன் தாய் தந்தையர் முன்செய்து கொண்ட ஏற்பாட்டின்படி அக்குழந்தையைப் பிறந்த விடத்திலேயே விடுத்துச் செல்லவேண்டும்; ஆயினும், தாய் தான்பெற்ற சிசுவை விட்டு அகல மனம் பொருது சிறிது மயங்கி நின்ருள். அப்பொழுது அம்மகவு வாய் திறந்து,

“ எவ்வுயிருங் காக்கவோர் ஈசனுண்டோ இல்லையோ
அவ்வுயிரில் யானொருத்தி யல்லனோ—வவ்வி
அருகுவது கொண்டிங் கலைகுவதேன் அன்னய்!
வருகுவது தானே வரும்”

என்ற பாடலைப் பாடிற்று. அதைக் கேட்ட பெற்ருேர், தைரியங்கொண்டு அவ்விடத்தைவிட்டுச் சென்றனர். குழந்தை அங்கேயே அழுதுகொண்டு கிடந்தது.

4. அவ் வழியாகச் சென்ற பாணன் ஒருவன், அக்குழந்தையைத் தன் இருப்பிடம் எடுத்துச் சென்று மிகவும் அன்பாய் வளர்த்து வந்தான். அவள் வளர்ந்து கல்வி கற்றுத் தேறிச் சிறந்த அறிவுடையவளானுள். அக்காலத்தில் அரசு செலுத்திக் கொண்டிருந்த சேர, சோழ, பாண்டிய

வரசர் அவ்வம்மையாருடைய திறமையை மெச்சி அவரைக் காணுந்தோறும் மரியாதை செய்து வந்தார்கள். அவர் சரஸ்வதியின் அவதாரம் என்று கூறப்படுகிறது.

5. ஔவையோடு பிறந்தவர் உப்பை, உறுவை, வள்ளி என்ற பெண்மக்கள் மூவரென்றும், திருவள்ளுவர், அதிகமான், கபிலர் என ஆண்மக்கள் மூவரென்றும் கபிலர் அகவல் என்னும் நூல் கூறும். அந்த நூலை இயற்றியவர், கபிலர் அல்லர் என்றும், வீரமாமுனிவரே அதை இயற்றியவரென்றும் பல வித்துவான்கள் கருதுகின்றனர்.

6. ஆகவே ஔவையோடு பிறந்தவர்கள் எழுவர் ஆகின்றனர். அவர்களையும் தாய்தந்தையர் பிறந்தவுடனே அவ்வவ்விடங்களில் விட்டுச் செல்ல அவர்கள் கடவுளருளால் பிறர்பால் வளர்ந்து பெரியவர்களாய்ச் சிறந்து விளங்கினார்கள். ஔவை, உலகிலிருந்த கால முழுவதும் யோகாப்பியாசம் செய்துகொண்டு பரிசுத்த முடையவராயிருந்தனராம். ஆகையால் ஔவை என்ற சொல்லுக்குக் கிழவி அல்லது அறிவில் மூதாட்டி என்ற பொருள் வழங்குவதாயிற்று.

7. ஔவை, அருமையான நெல்லிக்கனியைப் பெற்று, அதன் பெருமையால் நீண்ட ஆயுள்பெற்று வாழ்ந்தாரென்று சிலர் கூறுவர். வேறு சிலர், அவர் மந்திர சக்தியால் இருநூற்றுநாற்பது வருஷம் இவ்வுலகிலிருந்த பின்பு இமயமலைக்குச் சென்று அங்கு மறைந்து போனாரென்று கூறுகின்றனர்.

8. இக்கால ஆசிரியர் சிலர், ஔவையார் நெடுங்காலம் உலகில் வசித்தனரென்று கூறப்படுதலால், ஔவை என்ற பெயருள்ள இரண்டுபேர் ஒருவர் பின்னொருவராய் இவ்

வுலகில் வாழ்ந்திருக்க வேண்டுமென்று ஊகிக்கின்றனர்; அஃது எப்படியிருந்தபோதிலும் ஔவையார் என்ற பெயருள்ள ஒருமூதாட்டி இவ்வுலகில் இருந்தனரென்பது உறுதி.

9. ஔவையார், பல சிறிய நீதிநூல்களையும் சிறந்த தனிப்பாடல்களையும் செய்திருக்கிறார். கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலிய சிறந்த கவிவாணர் காலத்தில் அவரிருந்ததாகக் கூறுவர். ஔவையார் புகழைக் கேளாதார்,—அவரை அறியாதார்,—தமிழ் நாட்டில் எவருமில்லை. அவர் செய்த பாடல்கள் மிகவும் சிறந்தவை.

---

5. ஔவையார் இயற்றிய சில தனிப்பாடல்கள்.

1. வேழ முடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்;—பூழியர்கோன்
தென்னாடுமுத்துடைத்துத்; தெண்ணீர்வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து.

2. சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்,
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்,—நித்தம்
நடையும் நடைப்பழக்கம், நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

3. கற்றது கைம்மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிறாள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டா; புலவீர்!
எறும்புந்தன் கையாலெண் சாண்.

4. சுற்றுங் கருங்குளவி சூரைத்தார் ஆரியம்பேய்
எற்றும் சுடுகாட் டிடிகரையின்—புற்றில்
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததே ஞெர்கும்
தளர்ந்தாற்கொன் றீயார் தனம்.

5. உள்ள வழக்கிருக்க ஊரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி—எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்கும் காலறுவான் தன்கிளையும்
எச்சமறு மென்றால் அறு.

6. ஏசி இடலில் இடாமையே நன்று; எதிரிற்
பேசு மனையாளிற் பேய்நன்று;—நேசமிலா
வங்கணத்தில் நன்று வலியபகை; வாழ்வில்லாச்
சங்கடத்தில் சாவதே நன்று.

7. ஏரும் இரண்டுளதாய் இல்லத்தில் வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்—ஊரருகே
சென்று வரவெளிதாய்ச் செய்வாரும் சொற்கேட்பின்
என்றும் உழவே யினிது.

8. மாடில்லான் வாழ்வும், மதியில்லான் வாணிபம், நன்
ஞாடில்லான் செங்கோல் நடாத்துவதும்,—கூடும்
குருவில்லா வித்தை, குணமில்லாப் பெண்டு,
விருந்தில்லான் வீடும் விழல்.

9. போந்த வுதாரனுக்குப் பொன் துரும்பு; சூரனுக்குச்
சேர்ந்த மரணம் சிறு துரும்பு;—ஆய்ந்த
அறிவோர்க்கு நாரி யருந்துரும்பாம்; இல்லத்
துறவிக்கு வேந்தன் துரும்பு.

10. தண்டாம லீவது தாளாண்மை; தண்டி
அடுத்தக்கால் ஈவது வண்மை;—அடுத்தடுத்துப்
பின்சென்றால் ஈவது காற்கூலி; பின்சென்றும்
ஈயான் எச்சம்போ லறு.

11. வழக்குடையான் நிற்ப, வலியானைக் கூடி
வழக்கை அழிவழக்குச் செய்தோன்—வழக்கிழந்தோன்
சுற்றமும் தானும் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சமறும் என்றால் அறு.

---

6. கல்வி.

1. இவ்வுலகில் மக்களுடைய அறிவை வளர்ப்பதற்குத் தக்க கருவியாய் அமைந்துள்ளது கல்வியாகும். நாம் பல நூல்களைக் கற்பதனால் நமக்கு கல்வியறிவு உண்டாகிறது. கல்வியறிவில்லாதவன் மரத்தையொப்பானென்பது,

> "கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
> அவையல்ல நல்ல மரங்கள் ;—சபைநடுவே
> நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
> மாட்டா தவன்நன் மரம்"

என்னும் பாடலால் தெரிகிறது ; ஆகையால் நாம் கல்வி பயில்வது இன்றியமையாததாம்.

2. உலகத்தில் பல செல்வங்களுண்டு. சிலர் பொன்னையும் பிறபொருளையுமே சிறந்த செல்வமாக மதிக்கின்றனர். அவற்றைச் சம்பாதிப்பதே அவர்களுடைய நோக்கமாகவுமிருக்கின்றது. மக்கள் உயர்வாகக்கருதும் சிறந்த செல்வம், யாரிடத்திலும் நிலைத்து நிற்பதில்லை. அது திருடர் எளிதில் கவரக்கூடியது ; விரைவில் அழிந்து போவது ; பிறர்க்குக் கொடுத்தால் குறைவது.

3. கல்வி அப்படிப்பட்டதன்று ; கல்வியைக் கள்ளர் கவரமுடியாது. பிறர்க்குச் சொல்லுந்தோறும் அது வளர்கிறது. பிறர்க்குக் கொடுத்து அதைக்குறைத்துவிட முடியாது. செல்வத்தைப் போல் அது நீர் முதலியவைகளால் அழிவடையாது.

4. கல்வியால் அறிவு வளர்கின்றது ; அன்றியும் புகழும் உண்டாகிறது ; ஆகையால்தான் திருவள்ளுவர்,

> "கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
> புண்ணுடையர் கல்லா தவர்"

என்று சொல்லியிருக்கின்றார். கல்வி கற்றவர்களுக்கு எங்கே சென்றாலும் மதிப்புண்டு. அவர்களுடைய முகத்திலேயிருக்கும் கண்கள் தாம் உண்மையான கண்களென்பன. கல்லாதவர் இரண்டுகண்களும் புண்களையொக்குமென்பதே இதன் கருத்தாகும்.

5. கல்விபயின்றவன், அரசனைவிடச் சிறப்புடையவன். அரசனுக்குத் தன்தேசத்தில் மட்டுமே சிறப்புண்டு. கற்றவனுக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்புண்டு. அவனைக் கண்டவர் எல்லோரும் மரியாதை செய்வார்கள். அவன் இழிகுலத்திற்பிறந்தவனாயினும் உயர்குலத்தவரும் மதிப்பார்கள். பெரியோர் கூடியிருக்கும் சபையில் அவனுக்கு உயர்ந்த ஆசனம் கிடைக்கும்.

> "கடைநிலைத்தோ ராயினும் கற்றறிந்தோரைத்
> தலை நிலத்து வைக்கப்படும்";

என்று கூறியிருப்பதும் இக் கருத்தை உறுதிப் படுத்தும்.

6. ஆகையால் கல்வியை யாவரும் விரும்பிக் கற்க வேண்டும். கல்விகற்பது எளிதன்று. கல்வி கற்போருக்கு ஊக்கம் உறுதி ஆகியகுணங்கள் வேண்டும். அவர்கள் நல்லாசிரியரை அடுத்து விடாமுயற்சியோடு நாடோறும் கற்று வரல் வேண்டும். பயில்வதற்கென்று காலங்களை ஏற்படுத்திக் கொண்டு, அக்காலந்தவறாது கல்வி பயிலுதல் நலம். விரும்பும் போது, கல்வி கற்று மற்றக் காலங்களில் சோம்பியிருப்பவர் அறிவுடைய ராகார்.

7. கல்வி, பெரியதொரு கடலை ஒப்பது; கற்கும் மாந்தருடைய ஆயுளோ குறைவானது. ஆகையால் நாம் சாகுமளவும் கற்றாலும் கல்விக் கடலின் கரையைக் காண முடியாது; ஆகவே, நாம் நம் ஆயுட்கால மெல்லாம் கற்பதைக் கைவிடலாகாது.

8. கற்பது மட்டும் போதியதன்று; நாம் பயின்றவைகளை அடிக்கடி சிந்தித்து அதன்படி ஒழுகுதலும் வேண்டும். ஐயமுள்ளவைகளை அறிஞரை யணுகிக் கேட்டல் நலம். கற்றவரிடத்தில் அன்பு, பொறை, தயை, நேர்மை, உண்மை, தெய்வபத்தி முதலிய அரிய குணங்கள் இருத்தல் வேண்டும். அவை யில்லாவிடில் கற்றதனாற் பயன் சிறிதும் இல்லை. கற்றவர் நல்லொழுக்க முடையவராய் இருக்க வேண்டும்.

9. சில பிள்ளைகளுக்குக் கல்வி கற்பதில் விருப்ப மிருப்பதில்லை. அவர்கள், பொய்க்காரணங்களைச் சொல்லிக் கற்பதில் சோம்பலைக் காட்டுகின்றனர். தாய்தந்தையர் இருக்கும் காலத்திலேயே அவர்கள் உதவியினால் பிள்ளைகள் கல்வி கற்கவேண்டும். அப்படிப்பட்ட சிறந்த காலம், பின்னால் கிடைப்பது அரிது. ஆகையால், அக்காலத்தை வீணாக்காமல் கல்வியிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து முற்றக் கற்க வேண்டும். கற்றவர் என்றும் அழியாத செல்வத்தைப் பெற்றவர் ஆவர். கற்பதில் சோம்பலுள்ளவர் பிற்காலத்தில் மிக்க துன்பத்தை அடைய நேரும். ஆகையால் ஒருபோதும் கல்வியை அலக்ஷியம் செய்யலாகாது. கல்வியே எல்லா இன்பத்தையும் தரவல்லது.

---

7. ஹைதர் அலி.

1. தென் இந்தியாவிலே மைசூர் (மகிஷபுரி) என்ற பெயருள்ள ராஜ்யம் ஒன்று இருக்கிறது. அது மேடான பூமியில் உள்ளது. அங்குள்ள மக்கள் கன்னடம் என்ற மொழியைப் பேசுகிறார்கள். அது தமிழ்மொழியிலிருந்து

தோன்றிய கிளைப்பாஷைகளுள் ஒன்று என்பர் அறிஞர் அந்த ராஜ்யம் நெடுங்காலமாக இந்துவரசராளுகையி லேயே இருந்தது. ஆயினும், சுமார் ஐம்பது வருஷகாலம் அதை இரண்டு முகமதிய அரசர்கள் ஆண்டார்கள். அவர் களில் ஒருவர் ஹைதர் அலி என்ற பெயரினர்.

2. ஹைதர் அலி, சுமார் இருநூற்று இருபது வருஷங்களுக்கு முன்னே பிறந்தவர்; அவருடைய தகப்பனார் பட்டாணி என்ற முகமதிய வகுப் பைச் சேர்ந்தவர். சிறுவயது முதல் ஹைதர் மிக்க தைரியமும் புஜபல பராக்கிரமும் உடையவ ராக விளங்கினர். அவருக்கு எழு தப்படிக்கத் தெரியாது; ஆயினும் அவர் கூர்ந்த புத்தியும் துணிவும் உடையவர்.

3. அவர் இளமையிலிருந்தே உடற்பயிற்சி செய்வது வழக்கம். பெரியவரானவுடன் அவர் போர்ப் பயிற்சி பெற்றார். யுத்தம் செய்வதில் அவருக்கு மிக்க விருப்பமுண்டு; ஆகையால் அவர் தம் வயதையொத்த வய தும் தீரமுமுடைய சில வீரரைச் சேர்த்துக் கொண்டார். சிலவருஷங்களுக்குள் அவர் மிக்க பலமடைந்தார். அவர், ஒரு சிறிய மலைக்கோட்டையைக் கைப்பற்றினர். தம்மை ஒரு சர்தார் என்று சொல்லிக்கொண்டு மைசூரைச் சேர்ந்த தொரு ஜில்லாவைத் தன் வசப்படுத்திக் கொண்டார். சேனைகளுக்கு ஆயுதங்களைக் கொடுத்து யுத்தப்பயிற்சி செய்வித்தார்.

4. அக்காலத்தில் மைசூரில் ஓர் இந்து அரசன் அரசுசெலுத்திக்கொண்டிருந்தான். அவன் ஹைதருடைய திறமையைக்கண்டு அவருக்குத் தன் சேனையில் உயர்ந்த உத்தியோகம் கொடுத்தான். ஹைதருடைய சேனு வீரருக்கு மாதச்சம்பளம் கிடைக்கும் வழியையும் செய்து கொடுத்தான். அவ்விராஜ்யத்தில் ஹைதர் மிக்க கௌரவம் அடைந்தார். படிப்படியாய் அவர் மைசூர் ராஜ்யத்தின் சேனுதிபதியானுர்.

5. மைசூர் அரசர் அக்காலத்தில் சிறுவராகவிருந்தார்; ஆகையால் அவருடைய சிற்றப்பன் பிரதிநிதியாக இருந்து ராஜ்ய விஷயங்களை நடத்திவந்தார். இளவரசருக்கும் சிற்றப்பனுக்கும் மனத்தாங்கல் உண்டாயிற்று. ஹைதர், இள வரசருக்கு உதவி செய்வதாகச் சொல்லி, ராஜ்யாதிகாரங்களைச் சிற்றப்பன் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டார். பிறகு அரசரைச் சிறையிலிட்டுத் தாமே மைசூருக்கு அரசனுனர்.

6. ஹைதர், போர் செய்வதில் விருப்பமுள்ளவர்; அவர் சுமார் இருபத்திரண்டு வருஷகாலம் மைசூரை ஆண்டார். அவர் இறக்கும் வரையிலும் போர் செய்வதையே தொழிலாகக் கொண்டிருந்தார். அக்காலத்தில் கர்நாடக தேசத்தில் மகம்மது அலி என்னும் நவாபும் மகராஷ்டிரரும் மிக்க பலமடைந்து இருந்தனர். ஆங்கிலேயர் சென்ன பட்டணத்தில் ஒருகோட்டையைக் கட்டிக்கொண்டு வர்த்தகம் செய்துகொண்டிருந்தனர். இவர்களும் நாளுக்கு நாள் பலமடைந்து வந்தனர்.

7. ஹைதர், தென்னிந்தியா முழுவதையும் ஆள விரும்பினுர்; ஆகையால் அவர் மகம்மது அலியோடும்

மகராஷ்டிரரோடும், ஆங்கிலேயரோடும் யுத்தம் செய்தார். அவர் அவர்களுடைய நாடுகளிற் புகுந்து கொள்ளை யடித்தார். மக்களை மிக்க துன்பத்திற்கு ஆளாக்கினர்.

8. அவர் ஒரு முறை சென்னைக்கு வந்துவிட்டார். சென்னையிலிருந்த ஆங்கிலேயர், கவலையடைந்து அவருடன் சமாதானம் செய்து கொண்டார்கள். ஹைதர், கர்நாடகத்திற் புகுந்து வீடுகளையும், நெற்போர்களையும் வயல்களையும் தீக்கு இரையாக்கினர். அந்த வெளிச்சம் பல மைல்தூரம் தெரிந்தது. கடைசியில் ஆங்கிலேயர் தைரியம்பெற்று அவரையும் சேனைகளையும் துரத்திவிட்டார்கள்.

9. ஹைதர் மிகவும் கொடியவர். ஆயினும், அவர் தந்திரமுடையவர். அவர் இந்துக்களை முகம்மதியராகும்படி வற்புறுத்தவில்லை. அவர்களை அன்பாக நடத்தி அவர்களுடைய மதிப்பைப் பெற்றார். பூர்ணையர் என்ற பெயருள்ள ஒரு பிராமணனை அவர் தமக்கு மந்திரியாக வைத்துக்கொண்டார். அவர் அரசு செலுத்தின காலத்தில் குடிகள் க்ஷேமமாயும் சந்தோஷத்துடனும் வாழ்ந்தார்கள். ஹைதர், ஆங்கிலேயரோடு மீண்டும் யுத்தம் செய்யத் தொடங்கினர். பறங்கிப்பேட்டை, சோளங்கிபுரம் முதலிய இடங்களில் நடந்த யுத்தத்தில் அவர் தோல்வியடைந்தார்.

10. சண்டைசெய்து கொண்டிருக்கும்போது அவருக்கு நோய் கண்டது. ஆகையால் அவர் தம்முடைய கூடாரத்திலேயே இறந்து போனர். உடனே அவருடைய குமாரன் திப்பு சுல்தான் மைசூருக்கு அரசனானன். அவன் ஆங்கிலேயரோடு யுத்தத்தை நடத்திக் கொண்டேவந்தான். ஆங்கிலேயர் அவனை யுத்தத்தில்

கொன்று விட்டார்கள். அவன் இறந்ததோடு மைசூரில் முகம்மதியராட்சி ஒழிந்தது. ஆங்கிலேயர், பழைய இந்து அரசனுடைய பரம்பரையைச் சேர்ந்த ஒருவரை மைசூருக்கு அரசனாக்கினார்கள். அந்தப் பரம்பரை அரசர்களே மைசூரை இப்பொழுதும் ஆண்டுவருகின்றனர்.

---

8. சேரமான் கணைக்கால் இரும்பொறை.

1. நெடுநாளைக்கு முன்னே தென்னிந்தியாவில் மூன்று பெரிய ராஜ்யங்கள் இருந்தன. அவை சேரநாடு, சோழ நாடு, பாண்டியநாடு என்ற பெயரோடு விளங்கின. அவை ஒன்றுக் கொன்று எவ்விதத்திலும் குறைந்தவை அல்ல. சேரருக்கு வஞ்சியும், சோழருக்கு உறையூரும், பாண்டியருக்கு மதுரையும் தலைநகர்களாயிருந்தன.

2. சேரநாடாண்டவரில், சேரமான் கணைக்கால் இரும்பொறை என்பவன் ஒருவன். அவன் செல்வத்திலும் கல்வியே உயர்வுடையதென மதித்தவன்; பற்பல அறிவுநூல்களைக் கற்றவன்; அவன் புலவர்களை நன்கு ஆதரித்தவன். சிறிதும் மனங்கோணாது அவர்கள் விரும்பியபடி பொருள் கொடுத்து உதவியவன்.

3. அவனுடைய சமஸ்தான வித்துவானுக்குப் பொய்கையார் என்று பெயர். அவரிடத்தில் அரசன் பலநூல்களைக் கற்றுத்தேறினான். அரசன் மானத்தை உயிரினும் அதிகமாக மதிப்பவன். கல்வியே எல்லாச் செல்வங்களுக்கும் மேலானது என்னும் சிறந்த கொள்கையுடையவன். அவன் கல்வியிலேயே தன் முழுமனத்தைச் செலுத்

தினமையால் நாடாட்சியில் அவன் அதிக கவலை கொள்ளா திருந்தான் ; ஆகையால் அவனுடைய படைவலி குன்றியது.

4. அக்காலத்திற் சோழநாடாண்ட அரசனுக்குக் கோச்செங்கணன் என்று பெயர். அவனும், அறிவு ஆற்றல் முதலியவைகளிற் சிறந்தவன். புலவர்களை நன்றாய் ஆதரிப்பவன் ; மிகுந்த தெய்வ பக்தியுடையவன். யுத்தம் செய்வதில் திறமையுள்ளவன். சேர சோழ பாண்டியர் முற்காலத்தில் அடிக்கடி ஒருவரோடொருவர் சண்டையிடுவதுண்டு. அவ்வண்ணமே இரும்பொறைக்கும் செங்கணனுக்கும் ஒரு சமயம் யுத்தம் நேரிட்டது. கழுமலம் என்றவிடத்தில் இருவருக்கும் கடும் போர் நடந்தது. கோச்செங்கணன் போரில் வெற்றியடைந்தான். அவன் இரும்பொறையைப் பிடித்து விலங்கிட்டுக் காவலில் வைத்தான்.

5. சிறைப்பட்ட சேரமான் சிறையிலிருந்து வெகு கஷ்டப்பட்டான். ஊண் உறக்கமின்றி வருந்தினான். அவனுடைய சமஸ்தான வித்துவானாகிய பொய்கையார், அரசன் சிறையிலிருப்பதையும் அங்குப் படும் கஷ்டங்களையும் உணர்ந்தார். அரசனை எவ்விதத்திலும் சிறைமீட்க வேண்டுமென்று உறுதிகொண்டார். ஆகையால் அவர் ஒரு யுத்தி செய்தார்.

6. கோச்செங்கணன் சிறந்த வீரன்; தோள்வலி யுடையவன். மிக்க கீர்த்தி பெற்றவன். அவனுடைய வெற்றியையும் போர்க் களத்தையும் சிறப்பித்து ஒரு நூல் செய்து அவனைக் கேட்பிக்க எண்ணினர். அவ்வண்ணமே அவர் நாற்பது பாக்கள் கொண்ட களவழி என்னும் பெயருள்ள தொருநூலை இயற்றினர். அந்நூலுடன் சோழனுடைய சபைக்குச் சென்றார். அங்கு அந்தநூலை அரங்கேற்றினர். சோழன் மகிழ்ச்சியடைந்தான்.

7. ஆனந்தமடைந்த சோழன், புலவரைப் பார்த்து "புலவர் திலக! நம்மிடம் நீர் விரும்புவது என்ன! உமக்கு வேண்டும் பரிசில் யாது? சொல்லும்; தடையின்றிக் கொடுப்போம்" என்றான். பொய்கையார், "அரசே! பொருள் வேண்டி வந்தவனல்லேன்; செல்வம் நிலையற்றது; யாரிடமும் நிலைத்திராதது; சகடக்கால் போலச் சுற்றிச் சுற்றி வருவது; விரைவில் அழிந்துபோகக் கூடியது. ஆதலின், நான் அதை விரும்புகிலேன். எமக்குப் பலவித உதவிகளைச் செய்த எம்மரசன் சேரமான், உன்னால் சிறை செய்யப்பட்டுக் குடவாயிற் கோட்டத்தில் இருக்கின்றான்; அவனைச் சிறையினின்றும் விடுவிக்கவேண்டும். இதுவே நான் வேண்டும் பரிசில்" என்றார்.

8. சோழன் அவருடைய கருத்தை நன்குணர்ந்தான்; சேரனிடத்தில் புலவர் பெருமானுக்குள்ள அன்பையும் நன்றியறிதலையும் நோக்கினன். தான் புலவருக்குக் கொடுத்தவாக்கை நினைத்தான். உடனே சேரமான் கணைக்காலிரும்பொறையைச் சிறையினின்றும் விடுவிக்க உத்தரவு செய்தான். சிறைமீண்ட அரசன் புலவரை அழைத்துக் கொண்டு தனது நாட்டுக்குச் சென்றான்.

9. பொய்கையார் இயற்றிய களவழி என்னும் நூல் சோழனுடைய போர்க்களச் சிறப்பையும், அங்கு நடந்த செய்திகளையும் விரித்துக் கூறுவது. நீண்ட காலத்திற்கு முன்னே மதுரையில் தமிழ்ப்பாஷையை வளர்ப்பதற்கு மூன்றுபெரிய சங்கங்கள் ஏற்பட்டிருந்தன ; அவை முதற் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என நூல்களில் வழங்கும். அவற்றில் பல புலவர் சிகாமணிகள் வீற்றிருந்து தமிழைப்பரிபாலித்து வந்தனர். அவர்கள் பற்பல நூல்களை இயற்றியும் ஆராய்ச்சி செய்தும் நமக்குத் தந்திருக்கின்றனர். அவற்றில் களவழி நூல் ஒன்று. ஆகையால் அது சங்கமருவிய நூல் எனப்பெயர் பெறும்.

---

9. ஆங்கில அரசாட்சியின் பலன்.

1. நாம் வசிக்கும் இந்தப் பெரிய தேசத்திற்கு இந்தியா என்று பெயர். இதை முற்காலத்தில் பரதன் என்ற பெயருடைய அரசன் ஆண்டுவந்தான். ஆகையால் இதற்குப் பரதகண்டம் என்ற பெயரே பெருவழக்கு. அவன் இந்துமதத்தைச் சேர்ந்தவன். அவனுக்குப் பின்னர்ப் பற்பல அரசர் தோன்றி நீதிகுன்றுது செங்கோல் செலுத்தி வந்தனர். இந்தியா எல்லாவழிகளிலும் சிறந்த நாடு. அஃது எல்லாச் செல்வங்களுக்கும் உறைவிடமாயுள்ளது. அதைக் கைப்பற்ற வேண்டுமென்ற ஆசை அநேக அரசருக்கு உண்டு.

2. ஆகையால் மொகலாயர் என்ற வகுப்பார் அதைக் கைப்பற்றி, டில்லி நகரத்தை ராஜதானியாக்கிக் கொண்டு நெடுங்காலம் அரசு செலுத்திவந்தனர். அவர்களிற் சிலர்,

குடிகளைமிகக் கொடுமைப் படுத்தினர். பலர் நீதியாய் அரசு செலுத்தினுர்கள். மொகலாயர் இந்தியாவைக் கைப் பற்று முன்னும், வேறுவகுப்பைச் சேர்ந்த சில முகம்மதிய

அரசர் இந்தியாவை ஆண்டுவந்தனர். அவர்கள் செய்த கொடுஞ்செயல் கொஞ்சமன்று. அவர்களிற் சிலர், இந்துக்க ளுடைய கோயில்களை இடித்தார்கள். இந்துக்களை முகம் மதியராகும்படி வற்புறுத்தினுர்கள். அவர்களுடைய பொருள்களைக் கொள்ளை அடித்தார்கள். கோயில்களி லிருந்த விக்கிரகங்களை உடைத்தார்கள். ஆபரணங்களையும் பொன் வெள்ளிச் சமான்களையும் சூறையாடினுர்கள். இந் துக்குடிகளைக் காட்டு மிருகங்களைத் துரத்தி வேட்டையாடு வதுபோல் வெட்டியும் குத்தியும் கொன்றுர்கள்.

3. பின்வந்த மொகலாயர் சிறிது நீதியைக் கைக்கொண்டு ஆண்டனரேனும் அவர்களிற் சிலரும் குடிகளுக்கு மிக்க துன்பமே செய்தனர். அவர்கள் அரசாண்டகாலத்தில் இங்கிலாந்திலிருந்து ஆங்கிலேயர் என்ற வகுப்பார் வர்த்தகம் செய்யும் நோக்கமுடன் இந்தியாவுக்கு வந்தனர். அவர்கள் முதலில் தங்களுடைய சரக்குகளைக் காப்பதற்காகச் சில படைவீரரை ஆங்காங்கு வைத்திருந்தனர். அக்காலத்தில், சில முகம்மதிய அரசர் நீதியாய் அரசு செலுத்தின போதிலும், பொதுவாய் இந்துக்கள் முகம்மதிய அரசாட்சியில் வெறுப்படைந்திருந்தனர். ஆகையால் ஆங்கிலேயர் படிப்படியாய்த் தங்கள் அதிகாரத்தை விருத்தி செய்து இந்தியாவைக் கைப்பற்றிக்கொண்டனர்.

4. இப்பொழுது நமது தேசம், ஆங்கிலேயரால் ஆளப்பட்டுவருகிறது. இங்கிலாந்தின் அரசரே நமக்குச் சக்கரவர்த்தியாய் இருக்கிறார். நமது தேசத்தில் அநேக சிற்றரசர்களிருந்து சிற்சில பாகங்களை ஆண்டுவருகின்றனர். ஆயினும் அவர்கள் யாவரும் நமது ஆங்கில அரசருடைய அதிகாரத்திற்கும் பாதுகாப்புக்கும் உட்பட்டவர்களே. இந்திய அரசர் யாவரும் ஆங்கில அரசருக்கு ஆண்டுதோறும் கப்பம் செலுத்திவருகிறார்கள். ஆகையால் ஆங்கில அரசர் இந்தியாவுக்குச் சக்கரவர்த்தியாயிருக்கிறார். இப்பொழுதுள்ள நமது சக்கரவர்த்திக்கு ஜார்ஜ் மன்னர் என்று பெயர்.

5. ஜார்ஜ் மன்னர், இங்கிலாந்திலுள்ள லண்டன் நகரில் வசித்து வருகிறார். ஆங்கிலேயர் இந்திய அரசாட்சியைக் கைக்கொண்ட பின்னர் நமது தேசத்துக்குப் பல நன்மைகள் உண்டாயிருக்கின்றன; ஆயினும் சிலர் இதை ஒப்புக்கொள்ளுவதில்லை. ஆங்கில அரசாட்சியால் நாமடைந்திருக்கும் நன்மைகள் எவை என்று விசாரிப்போம்.

6. முற்காலத்தில் பகைவர் இந்தியாவுக்குள் நுழைந்து மக்களைக் கொன்றும் அவர்களுடைய பொருள்களைக் கொள்ளையிட்டும் வந்தனர். அவர்கள் பெரும்பாலும் இமயமலைத் தொடரிலுள்ள கணவாய்கள் வழியாகவே வந்தார்கள். சிலர் கடல் வழியாய் வந்ததும் உண்டு. ஆகையால் மக்கள் எப்பொழுதும் அமைதியின்றி இருப்பார்கள். ஆங்கிலேயர் அரசாட்சியைக் கைப் பற்றிய பின் இந்தத்திகில் நீங்கிவிட்டது. அவர்கள் எல்லைப்புறத்தில் பெரிய சேனையை நிறுத்தி நன்றாய்க் காவல் செய்கிறார்கள். அவர்களுடைய யுத்தக் கப்பல்கள் இந்தியாவை எப்பொழுதும் சுற்றிக் காவல் செய்துகொண்டே இருக்கின்றன; ஆகையால் நமது தேசத்திற்குள் பகைவர் எளிதில் நுழைய முடியாது. நமக்குப் பகைவர் பயமே இல்லை.

7. ஆங்கிலேயரால் நமது தேசப் பாதுகாப்பு கவனிக்கப்பட்டது; ஆகையால் மக்கள் மனக்கலக்கமின்றித் தங்கள் கைத்தொழில்களையும் வர்த்தகத்தையும் நடத்துகிறார்கள். அதனால் நமது தேசம் விருத்தியடைந்திருக்கிறது. முற்காலத்தில் பிற தேசவாசிகள் இந்தியாவிற்குள் புகுந்து வர்த்தகம் செய்யமுடியாது; ஆகையால், வர்த்தகம் குறைவாயிருந்தது. இப்பொழுது இந்தியாவோடு வர்த்தகம் செய்ய எல்லாச் சாதியாருக்கும் சுதந்திரம் உண்டு.

8. நீதிபரிபாலனம் சரியாய் நடந்துவருகிறது; நீதியை நிலைநிறுத்துவதற்காகப் பலவகையான சட்டங்களை ஆங்கிலேயர் ஏற்படுத்தி யிருக்கின்றனர். சட்டப்படி விசாரணை செய்து குற்றவாளியென்று கண்டபின் ஒருவரையும் தண்டனை செய்யாமல் விடுவதில்லை. நீதிபரிபாலனமே ஆங்கிலேயருடைய அரசாட்சியின் அடிப்படை; குற்றம் செய்

கிறவர் யாராயிருந்தாலும் அவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்கிறார்கள்.

9. தேசத்தில் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டுள்ளன. முற்காலத்தில் சண்டைகளும் கலகங்களும் நிகழ்ந்து கொண்டிருந்தன. தக்கியர் என்கிற ஒருவகைக் கொலை பாதகர் மனிதரைக் கொல்வது புண்ணியமென்றெண்ணி, வீதிகளிற் செல்லும் பிரயாணிகளை விடாமற் கொன்றும் கொள்ளையடித்தும் வந்தனர். இப்பொழுது ஆங்கிலேயர் அவர்களை முற்றிலும் தொலைத்துவிட்டனர்.

10. போக்குவரவுக்கு வேண்டியசாதனங்கள் பல; எங்கே பார்த்தாலும் பெரிய தெருக்களும் சாலைகளும் திறக்கப்பட்டிருக்கின்றன; குறுக்கிடும் ஆறுகளைத் தாண்டுவதற்கு ஆங்காங்குப் பலவாராவதிகளை அமைத்திருக்கிறார்கள். புகைவண்டிப் பாதைகளை அமைத்து நாம் வெகு சீக்கிரத்தில் போகவும் வரவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். முற்காலத்தில் ஒருவன் காசியிலிருந்து இராமேசுவரம் செல்லவேண்டுமானால் சில மாதங்கள் செல்லும்; இப்பொழுது அந்தப்பிரயாணயத்தைச் சில தினங்களுக்குள் முடித்துவிடலாம்.

11. சமாசாரங்களைத் தெரிவிப்பதற்குத் தக்கவசதிகள் இக்காலத்தில் உண்டு. மனிதர் பொதுவில் ஒருவரோடொருவர் சம்பாஷிப்பதில் மிக்க விருப்பமுடையவர்கள். சமீபத்திலிருப்பவர்கள் ஒருவரை ஒருவர் நேரிற்கண்டு சம்பாஷித்துக் கொள்ளுகிறார்கள். தூரதேசங்களில் இருப்பவரோடு கடிதங்கள் மூலமாய்ச் சம்பாஷித்துக் கொள்ளுகிறார்கள். முற்காலத்தில் நமது தேசத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனைக்குக் கடிதங்கள் போய்ச்சேரச் சில மாதம் செல்லும்;

அதிக கூலியும் கொடுக்கவேண்டும் இப்பொழுது தேசமெங்கும் பல தபால் தந்திச்சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. மிகவும் குறைந்த செலவில் உலகின் ஒருபக்கத்திலிருந்து மற்றப் பாகத்திற்குச் சமாசாரங்களைத் தெரிவிக்கலாகும்; தந்திமூலமாய் இன்னும் மிகவிரைவில் தெரிவிக்க இயலும்.

12. அநியாய வரிகள் ஒழிந்தன. முற்காலத்தில் அரசு செலுத்தின அரசர் பலவித அநியாய வரிகளை விதித்து வசூல் செய்து தங்கள் விருப்பப்படி செலவுசெய்து வந்தார்கள். அவர்கள் விதித்த வரிகளிற் சில, மிகவும் அநியாயமானவை, கலப்பைக்குவரி, நுகத்திற்குவரி, நெசவுத்தொழிலுக்குவரி, தட்டார், கருமார், தச்சர், அம்பட்டர், வண்ணர் முதலிய தொழிலாளர்களுக்குவரி. சில முகம்மதிய அரசர்கள் ஜேசியா என்கிற ஒருவரியை முகம்மதியர் அல்லாதவர்களிடத்தில் வசூலித்து வந்தனர். இப்பொழுது அவ்விதமான வரிகள் எதுவும் இல்லை. நியாயமான சிலவரிகளை விதித்து, மக்களுக்கு அநுகூலமான பலநன்மைகளை, கிடைக்கும் வருவாயைக்கொண்டு செய்துவருகிறார்கள்.

13. ஆங்கிலேயர் நமது மூடவழக்கங்களை ஒழித்து விட்டனர்; ஆகையால் இப்பொழுது கொடிய வழக்கங்களிற் பெரும்பாலன நமது தேசத்தில் இல்லை. முற்காலத்தில் மகளிரை உடன்கட்டை யேறச்செய்வது வழக்கம். மனிதரைத் தேவதைகளுக்குப் பலியிடுவதுமுண்டு; சிற்சில விடங்களில் மனிதரை ஆடுமாடுகளைப்போல் அடிமையாக விற்றும் வந்தார்கள். இவைபோன்ற வேறுபல கொடிய வழக்கங்கள் முற்காலத்தில் நமது தேசத்தில் இருந்தன. ஆங்கிலேயர் இப்பொழுது அவைகளை முற்றிலும் நீக்கி விட்டார்கள். யாராவது அவ்வித கொடிய செயல்களைச்-

செய்தால் உடனே கடுமையான தண்டனைக்கு ஆளா வார்கள்.

14 ஆங்கிலேயர் நமது நாட்டிற்கு வந்த பின் நமது தேசத்திற் கல்வி அதிகமாய்ப் பரவியிருக்கிறது. அவர்கள் எண்ணிறந்த பாடசாலைகளை ஏற்படுத்திக் கல்வி பயில்வித்து வருகின்றனர். அவர்கள் அநேக வைத்திய சாலைகளை ஏற் படுத்திக் குடிகளுக்கு இலவசமாய் வைத்திய வுதவி செய்து வருகின்றனர் நீர்ப்பாய்ச்சலுக்கு அனுகூலமாகப் பெரிய ஏரி முதலிய நீர் நிலைகளை ஆங்காங்கு ஏற்படுத்தியிருக்கின் றனர். ஆறுகளின் குறுக்கே அணைகளைக்கட்டிப் பல கால் வாய்களை வெட்டியும் வயல்களுக்குச் சுலபமாய் நீரைப் பாய்ச்ச ஏற்பாடு செய்திருக்கின்றனர். இவ்விதம் பல நன் மைகளை நமக்குச் செய்திருக்கும் அரசாங்கத்தாரிடத்தில் நாம் மிக்க அபிமான முடையவராய் இருத்தல் வேண்டும்.

---

10. பனை மரம்

1. நமது தேசத்திற் காணப்படும் மிகவும் உபயோக மான மரங்களுள் பனையும் ஒன்று. அது தென்னை, கமுகு, ஈந்து முதலிய மரங்களின் இனத்தைச் சேர்ந்தது. அது மிகவும் உயரமாகவும் நேராகவும் வளரும். உஷ்ணப் பிர தேசங்களிலே அது செழித்து வளர்கிறது. தென்னிந்தியா விலும் இலங்கைத் தீவிலும் அது மிகுதியாக உண்டு. அவ்விடங்களில், கரம்பு நிலங்களிலும் கடற்கரையையடுத்த மணல்பூமியிலும் அஃது உற்பத்தியாகின்றது.

2. தென்னை, கமுகு முதலிய மரங்கள் காலமறிந்து நீர்ப்பாய்ச்சி எருவிட்டால்தான் செழித்து வளர்ந்து பலன்

தரும்; பனைமரத்திற்கு நீர்ப்பாய்ச்சவேண்டியதே இல்லை. அது தனக்குவேண்டிய நீரை எப்பொழுதும் இழுத்துக் கொள்கிறது. அஃது எவ்வளவு உயரமாக வளர்கிறதோ அவ்வளவு ஆழமாக அதன் வேர்கள், பூமிக்குட் சென்று அங்கு உள்ள நீரை இழுத்துக் கொள்ளுகிறது. ஆகையால் பனைமரம் எப்பொழுதும் செழிப்பாய்த் தோன்றுகிறது.

3. பனை, விதையிலிருந்து முளைத்து வளருகிறது, வேறு எவ்வகையாயும் அதை உற்பத்தி செய்ய முடியாது. அதன் விதைக்கும் பனங்கோட்டை என்றுபெயர். அது பனம் பழத்திலிருந்து நமக்குக் கிடைக்கிறது. சில பழங்களில் மூன்று விதைகளும், சில பழங்களில் இரண்டு விதைகளும், சில பழங்ளில் ஒரேவிதையும் இருக்கும்; பனங்கொட்டை மிகவும் கடினமானது.

4. ஒரு பனங்கொட்டையைப் பூமியிற் புதைத்தால் அது முளைத்து முதலில் பூமியில் கிழங்காய் இறங்கும். அதற்குப் பனங்கிழங்கு என்று பெயர். முளையுண்டானபின் பனங்கொட்டைக்குள் வெண்மைப் பொருளொன்று தோன்றுகிறது. அதற்குப் பனம்பூ என்று பெயர். அதை மனிதர் விரும்பி உண்பார்கள்.

5. மக்களிற் சிலர், கிழங்கைப் பூமியிலிருந்து வெட்டியெடுத்து வேகவைத்து உண்பார்கள். கிழங்கு நன்றாய்

முற்றியபின் அதன் நுனியிலிருந்து இளங்குருத்துக்கள் தோன்றும். அவை குருத்து ஓலை எனப்படும். அவை விரிந்து பெரிதாகும். அதன்பின் கிழங்கு வளர்ந்து இளங்கன்று ஆகும். அது நாளுக்கு நாள் வளரும். அப்படி வளர்ந்த செடிக்கு வடலி என்று பெயர் வழங்கும். வடலி நாளுக்கு நாள் வளர்ந்து உயரும்; அப்பொழுது அதன் அடிமுதல் நுனிவரையில் உலர்ந்த மட்டைகள் நெருங்கியிருக்கும். அவையெல்லாம் நாளுக்குநாள் உதிர்ந்துபோகும் அதன் பின்தான் அதைப் பனை மரம் என்பார்கள்.



6. பனைமரம் சுமார் நூறு வருஷம் வரையில் உயிரோடிருக்கும். அது வளர்ந்து பெரிய மரமாக இருபது வருஷம் செல்லும். அஃது எழுபது எண்பது அடி வரையிலும் வளரும். பனைமரம் தென்னையைப்போல் பெரும்பாலும் அதிகக் கோணலாய் இருப்பதில்லை. பனைமரத்துக்குக் கிளைகள் உண்டாவதில்லை. அஃது ஒரே தண்டாய் நேராக வளருகிறது. பனையின் தண்டு திரண்டவடிவமானது. தண்டின் மேற்புறத்தில் கடினமான கறுத்த பட்டைகள் மூடியிருக்கும். அதன் அடிமுதல் நுனிவரையில் அதைச் சுற்றி வடுக்கள் காணப்படும்.

7. பனை, மனிதருக்கு மிகவும் உபயோகமாயிருப்பதாலும், அதன் எந்தப்பாகமும் வீணுய்ப் போகாமையாலும் அதைக் கற்பகவிருட்சம் என்பார்கள். பனையோலை மிகவும் பெரியது. அஃது ஒழுங்கான உருவமுடையதன்று; பல

பிரிவுகளாக அமைந்திருக்கும் ஆயினும், அது பலவகையாய் மனிதருக்கு உபயோகப் படுகிறது. அதைக்கொண்டு



வீடுகளுக்குக் கூறை வேய்கிறார்கள். வேலிகளைக் கட்டவும் அஃது உபயோகப் படுகிறது; பாய், விசிறி, கூடை, தொப்பி முதலியவை செய்கிறார்கள். முற்காலத்தில் காகிதத்துக்குப் பதிலாக எழுத்தாணி கொண்டு அதில் நூல்களை எழுதுவது வழக்கம். பச்சை ஓலை ஆடு மாடுகளுக்குத் தீனி ஆகிறது. ஓலையின் மத்தியிலிருக்கும் ஈர்க்கினால் துடைப்பம், பிரிமணை முதலியவை செய்வார்கள்.

8. ஓலையைத் தண்டோடு சேர்க்கிற பாகத்திற்கு மட்டை என்று பெயர். அதன் இருபுறமும் வாள்போன்ற பற்கள் உண்டு. பனைமட்டையில் நாருண்டு. அதை உரித்துப் பல வேலைகளுக்கு உபயோகிப்பார்கள்; பனைநார் மிகவும் உறுதியானது. அதனால் கயிறுகள் செய்வார்கள்.

9. பனைமட்டைகளுக்கிடையில் பாளைகள் தோன்றுகின்றன. அவற்றிலிருந்து ஒருவகையான சாறு இறக்குகிறார்கள். அதற்குக் கள் என்று பெயர். அதைச் சிலர் பானம் பண்ணுவார்கள். பனம்பாளையிலிருந்து பதநீரும் இறக்குவதுண்டு. அதைக் காய்ச்சி, பனைவெல்லம் செய்வார்கள். பதநீர் தித்திப்பானது.

10. பனைமரம் வருஷத்தில் சிலகாலங்களில் தான் காய்க்கும். அதன் காய்க்குப் பனங்காய் என்று பெயர்; அஃது உருண்டைவடிவமாயிருக்கும்; ஆயினும் அதன்

மேற்புறம் சிறிது குவிந்தும், அடிப்புறம் அகன்றும் இருக்கும். பனங்காய், மரத்தில் குலைகுலையாய்க் காய்க்கும். ஒரு குலையில் மூன்று முதல் இருபது காய்கள் வரையிலும் இருக்கும். காய் சிறிதாயிருக்கும்போது அதற்குக் குரும்பை என்று பெயர். அது சிறிது பெரிதானால் அதை நுங்குக்காய் என்பார்கள்.



11. நுங்குக்காயை வெட்டினால் நுங்கு வெளிப்படும். நுங்கு என்பது பனங்காயின் இளம்விதை. அது பக்குவப்பட்டு முற்றியபின் விதையாகிறது. ஒவ்வொரு நுங்குக்கும் கண் என்று பெயர். இளநுங்கு மிகவும் தித்திப்பாயும் உண்பதற்குச் சுவையாயுமிருக்கும். அது தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் குளிர்ச்சியையும் தரும். நுங்கு உஷ்ணத்தைத் தணிக்கக் கூடியது.



12. நுங்குக்காய் முற்றிப் பழுத்தால் பனம்பழம் எனப்படும். அது தித்திப்பாயிருக்கும். ஏழைகள் அதை விரும்பி உண்பார்கள். பனம்பழத்தை உண்பவர்களுக்கு நெடுநேரம் பசி உண்டாகாது; பனம்பழம் விரைவில் ஜீர்ணமாகாது. இலங்கைத்தீவிலுள்ள மக்கள் பனம்பழத்திலிருந்து ஒருவகையான உணவுப் பொருளைச்செய்து பத்திரப்படுத்தி வைத்துக் கொள்வார்கள்; அதற்குப் பனாட்டு என்று பெயர்.

13. பனைமரத்தைப் பிளந்து, சிறு துண்டுகளாக வெட்டி வீடுகள் கட்டுகிறார்கள். கைமரங்கள், தூலங்கள், வரிச்சல்கள், தூண்கள் முதலிய யாவும் பனைமரத்தால் அமைக்கப்படுகின்றன. இன்னும் பனைமரத்தால் வேறுசில சாமான்களையும் செய்கிறார்கள். ஆகையால் பனைமரத்தின் உபயோகங்கள் எவ்வளவென்று சொல்ல முடியாது. பனைமரத்தைக் குறித்து வடமொழியில் ஒருநூல் உண்டு. அதில், பனைமரம் பிரம்மாவால் படைக்கப் பட்டதென்றும், அது மனிதருக்கு ஆகாரம், ஔடதம், செல்வம் முதலியவற்றைக் கொடுக்கிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறதாம்.

---

11. ரிப்பன் பிரபு.

1. சக்கரவர்த்தியாகவுள்ள ஆங்கில அரசர், வெகு தூரத்தில் இருப்பதால் இந்தியாவை நேரில் தாமே ஆள முடிவதில்லை; ஆகையால், அவர் நமது தேசத்தை ஆளும்படி தக்க பிரதிநிதிகளை அனுப்புவது வழக்கம். அவர்களுக்கு ராஜப்பிரதிநிதிகள் என்று பெயர். அவர்களில் ரிப்பன் பிரபு ஒருவர்; அவர் வெகுகாலத்திற்கு முன் ராஜப்பிரதிநிதியாயிருந்து, மகாராணி விக்டோரியா பெயரால் நமது தேசத்தை ஆண்டவர்.

2. ரிப்பன் பிரபு, தாய் தந்தை என்னும் இருவழியிலும் உயர்குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய தந்தை இங்கிலாந்தில் மந்திரியாயிருந்து மிக்க கீர்த்தி பெற்றவர். அவருக்கு வைக்கவுண்டு கோட்றிச் என்று பெயர். ரிப்பன் பிரபு, கி-பி 1827-ஆம் ௵ அக்டோபர் ௴ 24உ பிறந்தவர்; கருவிலே திருவுடையவராகவே பிறந்தார்.

3. அவருடைய பெற்றோர் அவரைச் சிறுபருவத்திலேயே பாடசாலைக்கு அனுப்பிக் கல்வி பயிலச்செய்தனர். "வளரும் பயிர் முளையிலே தெரியும்" என்றபடி சிறுபருவத்திலேயே பிற்காலத்தில் மிக்க புகழுடைவர் என்பதைக்



காட்டும் பல குறிகள் அவரிடம் காணப்பட்டன. அவர் கருத்துடன் கல்வியைக்கற்றுச் சிறந்த புத்திமானென்ற பெயர்பெற்றார். அரசாங்க முறையில் நல்ல பயிற்சியடைந்த குடும்பத்திற் பிறந்தவராகையால் அவருக்கு இளவயதிலே அவ்விஷயங்களில் இயல்பாகவே விருப்பமுண்டாயின.

4. முதலில் அவர், ஹவுஸ் அவ் காமன்ஸ் என வழங்கும் ஆங்கிலப் பொதுமக்கள் சபையில் அங்கத்தி

னர் ஆனர். அவர் சிலகாலம் இங்குப் பயிற்சி பெற்றபின ஹவுஸ் அவ் லார்ட்ஸ் எனவழங்கும் பிரபுக்கள் சபையில் அங்கத்தவராகி, இராஜ்ஜிய விஷயங்களை மிக்க நுட்ப மாய்க் கவனித்து வந்தார், அவ்விஷயங்களைக் குறித்து ஆலோசிக்கும்போதெல்லாம் அவர் சபையாரோடு தாராள மாய்க்கலந்து கொண்டு தமது கருத்தை வெகுசாதுர்ய மாய் வெளியிட்டு வந்தனர்; ஆகையால் அவர் இராஜாங்க விஷயங்களை நன்றாய்க் கற்றுக்கொண்டார். சபையில் சிறிதுமஞ்சாது பேசும் திறமையும், புத்திசாதுரிய மும், எதிரிக்குச் சிறிதும் பின்வாங்காமல, எடுத்த காரியத் தை எவ்விதத்திலும் முடிக்கும் சக்தியும் அவரிடத்தில் விளங்கின; ஆகையால் அச்சபையோர் எவ்விஷயத்திலும் அவருடைய கருத்தைச் சிறந்ததெனவே மதித்துவந்தனர்.

5. ரிப்பன் பிரபு, இவ்விதம் புகழ் பெறவே அஃது அக்காலத்தில் அரசியாயிருந்த மகாராணி விக்டோரியா பெருமாட்டியின் காதிற்கு எட்டிற்று. ஆகையால் அவர் ஒன்றின்பின் ஒன்றாய்ப் பல அராசாங்க உத்தியோகங் களை எளிதிற் பெற்றார். முதலில் அவர், போரைக்குறித்து ஆலோசிக்கும் சபைக்கு உபகாரியதரிசி என்னும் ஸ்தா னத்தில் நியமனம் பெற்றார். சுமார் இரண்டு வருஷம் வரையில் அவர் இவ்வேலையில் அமர்ந்து தமது கடமைகளை நன்றாய் நிறைவேற்றி வந்தார்.

6. அப்பால் ரிப்பன் பிரபுவுக்கு வேறொரு உத்தி யோகம்கிடைத்தது. இந்தியா சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்கவும், இந்தியாவிலுள்ள ராஜப்பிரதிநிதிக்கு அப் போதைக்கப்போது உத்தரவுகள் கொடுத்து இராஜ்ஜிய விஷயங்களை நடத்தவும் இங்கிலாந்தில் ஒரு பெரிய அதி காரியுண்டு. அவருக்கு இந்தியா மந்திரி என்று பெயர்.

ஆங்கில பாஷையில் அவரை, சேக்கிரிட்டேரி அவ் ஸ்டேட் என்பார்கள். ரிப்பன் பிரபு சிறிதுகாலம் அவருக்குதவி யாகக் வேலை பார்த்துவந்தார். இங்கு அவர் இந்திய அரசாட்சி விஷயங்களை நன்றாய் அறிந்து கொண்டார்.

7. ரிப்பன் பிரபு, தமது கடமைகளைச் செவ்வனே நடத்திவந்தமையால் அவர் உத்தியோக உயர்வு பெற்றார். ஆங்கில அரசாங்கத்தார் அவரை யுத்த விஷயங்களைக் கவனிக்கும் காரியதரிசியாக நியமித்தனர். மூன்று வருஷங்களுக்குப் பின்னர் அவரை இந்தியா மந்திரி ஸ்தானத்தில் நியமித்தனர். இக்காலத்தில் மிக்க பிரசித்திபெற்ற கிளாட்ஸ்டன் பிரபு முதன் மந்திரியானார். அவர் ரிப்பனிடத்தில் விளங்கின அரும்பெருங்குணங்களைக்கண்டு அவர் இந்திய ராஜப்பிரதி ஸ்தானத்திற்குத் தகுந்தவரென்று கருதி அவருக்கு அந்தப் பதவியைக் கொடுத்தனர்.

8. ஆகையால் ரிப்பன் ஐம்பது வருஷங்களுக்கு முன்னே விக்டோரியா பெருமாட்டியின் பிரதிநிதியாய் நமது தேசத்திற்கு வந்தார். முன் மந்திரியாயிருந்து, பின் ராஜப் பிரதிநிதியாய் வந்தவர் இவர் ஒருவரே. ஆகையால் இவர் இங்குவருமுன் இந்தியா சம்பந்தமான எல்லா விஷயங்களையும் நன்றாய் அறிந்திருந்தார். இந்தியாவில் அக்காலத்திலிருந்த பிரபுக்களும் சிற்றரசரும் அவரைப்பற்றி நன்றாய் அறிந்திருந்தார்கள்; ஆகையால் இந்தியமக்கள் அனைவரும் அவருக்கு நல்வரவு கூறி எதிர்கொண்டு அழைத்தனர்.

9. ரிப்பன் பிரபு, இந்தியாவுக்கு வந்தபோது இங்கிலாந்திற்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் இடையில் கடும்

போர் நடந்துகொண்டிருந்தது. அவர் யுத்தத்தை நிறுத்தி அப்துல்ரஹிமான் என்னும் முகம்மதிய வீரரை அத்தேசத்திற்கு அரசனாக்கினர். அதனால் இங்கிலாந்திற்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் இடையில் என்றும் நீங்கா நட்பு உண்டாயிற்று.

10. மைசூர் என்கிற பெரிய ராஜ்ஜியம் அக்காலத்தில் ஆங்கிலேயர் அதிகாரத்தில் இருந்தது. கிருஷ்ணராஜ உடையார் என்கிற மைசூர் அரசருடைய சுவீகார புத்திரர் தக்க வயதையடையும் முன்பே அரசர் இறந்தார். ஆகையால் அச்சிறுவர் தக்கபருவமடையும் வரையில் ஆங்கில அரசாங்கத்தார் ராஜ்ய விஷயங்களை மேற்பார்வை யிட்டுவந்தனர். சிறுவர் தக்க பருவமடைந்தமையால் ரிப்பன் பிரபு மைசூர் இராஜ்ஜியத்தை அவர் கையில் ஒப்பித்தார். இவ்விதமாய் அவர் இந்திய சிற்றரசரின் பெருமதிப்பைப் பெற்றார்.

11. நமது தேசத்தில் நன்றாய்க் கல்விகற்று, தகுதி யுடையவர்களை இராஜ்ஜியவிஷயங்களில் சம்பந்தப்படுத்தி அவர்களைச் சுயவாட்சியில் பழக்க வேண்டு மென்பது ரிப்பன் பிரபுவுடைய விருப்பம்; ஆகையால் அவர் புதிதாய் ஒருசட்டத்தை ஏற்படுத்தி, அச்சட்டத்தின் சகாயத்தால் நகரபரிபாலன சபைகளையும் ஜில்லா சபைகளையும் ஸ்தாபிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தார். அவரே சுயவாட்சி சபைகளை முதலில் தோற்றுவித்தவர். ஆகையால் அவர் இந்திய மக்களின் அன்பையும் பெருமதிப்பையும் பெற்றார்.

12. இந்திய மக்கள் அவருடைய பெயரை என்றும் ஞாபகப்படுத்திக் கொள்ளும்பொருட்டு ஆங்காங்குப் பல சிலைப்படிவங்களை நிறுத்திபிருக்கின்றனர்; கட்ட

டங்கள் கலாசாலைகள் வைத்தியசாலைகள் முதலியவை களுக்கு அவருடைய பெயரைவைத்து வழங்கி வருகின்றனர். சென்னையில் அவருடைய அழகிய சிலைப்படிவம் ஒன்று நிறுத்தப்பட்டிருக்கிறது. சென்னை நகர பரிபாலன சபைக் காரியாலயமுள்ள பெரிய கட்டடத்திற்கு அவருடைய பெயரையே கொடுத்திருக்கின்றனர். அவர் ராஜப் பிரதிநிதி உத்தியோகத்தை விட்டு நீங்கி இங்கிலாந்தில் வசித்தகாலத்திலும் நமது தேசத்திற்காக வெகு கஷ்டப் பட்டு உழைத்தவர். ஆகையால் நாம் அவரை என்றும் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

---

12. தமிழின் அருமை.

1. சிறுவர்களே, நீங்கள் பேசும் மொழிக்குத் தமிழ் என்று பெயர். நீங்கள் பிறந்த நாள் முதல் அந்த மொழியையே பேசிவருகிறீர்கள். உங்களுடைய தாய் தந்தையர் சுற்றத்தவர் முதலியோர் பேசுவதும் அது தான். ஆகையால் அஃது உங்கள் தாய்மொழியாகும்; ஆகையால், நீங்கள் அந்த மொழியைக் கற்பதில் அசட்டை செய்யாமல் கருத்தாய்ப் பயில வேண்டும்.

2. தமிழ் என்ற சொல்லிற்கு இனிமை என்பது பொருளாம். ஆகையால், தமிழ் மொழி என்பது, இனிமை யான பாஷை என்று பொருள் தரும். அஃது எக்காலத்தில் தோன்றியதென்று சொல்ல முடியாது. அது நீண்ட காலத்திற்கு முன்னே இயற்கையாய் உண்டானதொரு மொழி.

3. தமிழ் மொழியை அகத்தியர் என்ற முனிவர் முதன் முதல் உண்டாக்கினரென்றும் அவர் சிவபெரு

மானிடத்தில் தமிழைக் கற்றனரென்றும், பின்னர் உலகிற்கு அதைத் தந்தவர் அவரே யென்றும் சிலர் சொல்வதுண்டு. அகத்தியர், தமிழ் மொழிக்கு இலக்கணம் செய்திருக்கின்றனர் ; அதையன்றி, தமிழை உண்டாக்கினவர் அல்லர்.

4. தமிழ் வழங்கும் நாட்டுக்குத் தமிழ் நாடு என்று பெயர். முற்காலத்தில் அது வடக்கில் திருவேங்கடம் முதல் தெற்கில் கன்னியாகுமரி முனைவரையிலும், மேற்கில் குடகு முதல் கீழ்கடல் வரையிலும் வழங்கி வந்தது. இந்த எல்லைகளுக்கு உட்பட்ட நாடே முற்காலத்தில் தமிழ் நாடு என வழங்கியது. இப்பொழுது பலவேறு நாடுகளிலும் தமிழையே பேசிவருகுகிறார்கள்.

5. தமிழ் மொழியில் அருமையான பல நூல்கள் இருக்கின்றன ; சாஸ்திரங்கள், புராணங்கள், காவியங்கள், நீதி நூல்கள் ஆகிய இவைகளின தொகை எண்ணுள் அடங்கா. தமிழிலுள்ள தேவாரம், திருவாசகம், திவ்விய பிரபந்தம் முதலிய அரிய நூல்கள் பக்திச் சுவை சொட்டுவன; அவை காதிற்கு இன்பத்தை விளைவிப்பவை ; கேட்கும் தோறும் மனத்தை உருக்கிப் பரவசப்படுத்தத் தக்கவை. இவ்வித நூல்களைப் பிறபாஷைகளிற் காண்பதரிது.

6. தமிழ் கற்பதனுல் நன்மைகள் பல உண்டாகின்றன. தமிழ் நூல்களிலிருந்து பண்டைக்காலத்திலிருந்த தமிழருடைய நடை, உடை, பாவனை, பழக்க வழக்கம் முதலியவைகளை நாம் நன்றாய்த் தெரிந்து கொள்ளுகிறோம். அதிலுள்ள நீதி நூல்கள் நமக்கு நல்லொழுக்கத்தைப் புகட்டுகின்றன. தமிழிலுள்ள சாஸ்திரங்கள் நம் அறிவை வளர்க்கின்றன. மத நூல்கள் நம்மைப் பகவா

னுக்கு அடிமைப்படுத்தி அவருடைய அருளுக்கு உரிய வராக்குகின்றன. ஆகையால், தமிழ் மிகவும் பூரணமான பாஷை என்பதில் சந்தேகமில்லை.

7. முற்காலத்தில், பாண்டிய அரசர்கள் தமிழை வளர்த்தார்கள். அவர்களுடைய தலைநகர் மதுரை. அங்கு அவர்கள் மூன்று சங்கங்களை ஒன்றன் பின் ஒன்ருய் ஸ்தாபித்துத் தமிழ்ப் பாஷையை வளர்த்து வந்தார்கள். அச் சங்கங்கள், முதற் சங்கம் என்றும், இடைச் சங்கம் என்றும், கடைச் சங்கம் என்றும் பெயர் பெற்றன. அச் சங்கங்களில் புலவர் பலர் இருந்து தமிழ் நூல்களை இயற்றியும் ஆராய்ச்சி செய்தும் வந்தார்கள்.

8. தமிழ்ப்பாஷை இவ்வளவு சிறப்படைந்தாலும், அதன் வளர்ச்சிக்கு இடையூறுகள் எதிர்ப்பட்டன. சங்கம் இருந்த இடங்கள் கபாடபுரம், மதுரை முதலியனவாம். கடல் பெருக்கெடுத்தமையால் அரிய தமிழ் நூல்கள் நீராலழிந்தன. முகம்மதியர் தென்னிந்தியாவைத் தாக்கிய போதும் பல அரிய தமிழ் நூல்கள் தீக்கிரையாயின; ஆயினும், இவ்வித இடையூறுகளில் தப்பி, தமிழ் இன்றைக்கும் பல்லாயிரம் சிறந்த நூல்களையுடையதாய் விளங்குகின்றது.

9. தமிழ் வட மொழியிலிருந்து தோன்றியதென்று சிலர் கருத்து. இக்கருத்துத் தவறு என்று சிறந்த தமிழ் வித்துவான்கள் தக்க ஆதாரம் காட்டி விளக்கி யிருக்கின்றனர். ஆகையால் தமிழ் உயர்தனிச்செம்மொழி என்பதில் ஐயம் சிறிது மில்லை.

10. தமிழிலிருந்து வேறு பல பாஷைகள் தோன்றி யிருக்கின்றன. அவை கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு என்பவை. இவற்றிலிருந்து இன்னமும் நாமறியாத

கிளைப் பாஷைகள் பல தோன்றியுள்ளன. இவை யனைத்திற்கும் தமிழே தாய்ப் பாஷையாம். ஆகையால் தமிழின் பெருமையை உள்ளபடி யறிந்து கூறுதல் எவர்க்கு மியலாத செயலேயாம்.

11. தமிழ்க் கல்வியை நாம் விரும்பிக் கற்றல் வேண்டும்; அதை வெறுப்பது, பெற்ற தாயை அலட்சியம் செய்வது போன்றதாகும். தமிழ்க்கல்வி இக்காலத்தில் குறைவடைந்து வருவதற்குப் பல காரணங்கள் உண்டு. நமது தாய்ப் பாஷையாகிய தமிழை மேன்மேலும் வளர்க்க வேண்டியது நமது கடமையாகும்.

---

13. தமிழ்மொழிச் சிறப்பு.

(பாடல்.)

1. தமிழெனும் பாஷை தனிப்பாஷை அது
தாரணி யோர்புகழ் தற்பாஷை
பார்புகழ் கொண்ட பெரும்பாஷை அதன்
பழமை உரைத்தல் அரிதாமே.

2. ஆரியம் தந்த தருந்தமிழ் என்று
அறைகுவர் சிற்சிலர் அன்னவர்கள்
ஆரியம் வேறு தமிழ் வேறு அதை
ஆராய்ந்து பார்த்தால் தெரிய வரும்.

3. தமிழ்மொழி தென்மொழி ஒன்றாகும் அது
தண்டமிழ் என்றிடும் தற்பாஷை
பண்டை நாள் தொட்டுப்பார்ந்த இப்பாஷைக்கு
பாரினிலே இணை இல்லை யென்பர்

4. செந்தமிழ் என்றுநாம் சொன்னவுடன் இன்பத்
தேன்வந்து பாயுது நாவினிலே
தேன்மொழி தென்மொழி என்று புலவர்கள்
தேசமெங்கும் பறை சாற்றி யுள்ளார்.

5. சைவம் தழைக்க வருபாஷை அது
தாரணிக் கோர்பெரு மாணிக்கமாம்
பல்திற நூல்களைத் தந்திட்ட பாஷை நற்
பாவலர் போற்றும் பழம் பாஷை

6. சுந்தரர் சம்பந்தர் மாணிக்க வாசகர்
தோன்றிடும் அப்பர் எனும் குரவர்
பற்பல பாசுரம் பாடித் துதித்திட்ட
பக்தி நிறைந்த தமிழ்ப்பாஷை.

7. ஆழ்வார்கள் தோன்றி அகிலமெங்கும் புகழ்
அகல விரித்த பெரும் பாஷை அது
உம்பர் விரும்பும் தமிழ்ப்பாஷை அது
உத்தம பாஷை உலகினிற்கு.

---

14. ஏழாம் எட்வர்ட் அரசர்

1. இப்பொழுது நம்மை ஆண்டு வருபவர், ஜார்ஜ் சக்கரவர்த்தி யென்பது உங்களுக்குத் தெரியும். இவருடைய தந்தையாருக்கு எட்வர்ட் சக்கரவர்த்தி என்று பெயர். அவர் மகாராணி விக்டோரியா பெருமாட்டியின் மூத்த குமாரர்; ஜார்ஜ் சக்கரவர்த்திக்கு முன் அவர் நமது சக்கரவர்த்தியாயிருந்து நம்மை ஆண்டவர். இங்கிலாந்தின் அரசரும் நமது சக்கரவர்த்தியுமாய் அவர் சுமார் பத்து

வருஷ காலம் அரசு செலுத்தினர். அவருக்கு நெடுங்காலத்துக்கு முன் எட்வர்ட் என்ற பெயரையுடைய ஆறு அரசர் இங்கிலாந்தில் அரசராயிருந்தனர்; இவர் அந்தப் பெயரையுடைய ஏழாவது அரசர்; ஆகையால், இவருக்கு ஏழாம் எட்வர்ட் என்று பெயர் வழங்கலாயிற்று.

2. இவர் சுமார் தொண்ணூறு வருஷங்களுக்கு முன்னே இங்கிலாந்தின் தலை நகராகிய லண்டன் நகரிலே பங்கிங்ஹாம் பாலெஸ் என்கிற சிங்கார மாளிகையிற் பிறந்தார். இவருடைய தந்தையாருக்கு அல்பேர்ட் என்று பெயர். அவர் மகாராணி விக்டோரியாவின் தாயாருடைய சகோதரர். டியூக் அவ் சாக்ஸ் கோபேர்க் என்னும் பிரபுவுடைய புத்திரர். ஆகையால் இராணியை விவாகம் செய்வதற்கு முன்னரும் மகாராணிக்கு அம்மான் முறையினர் ஆவர்.

3. எட்வர்ட் அரசர் பிறந்தவுடன் இங்கிலாந்து பொது மக்கள் இராணிக்குப் பின்னர் இராஜ்ஜியபாரத்தைத் தாங்கி அரசு செலுத்துவதற்கு ஒரு குமாரன் பிறந்ததைக் குறித்து ஆனந்தமடைந்தனர். இராஜ தம்பதிகள் புதிதாய்ப் பிறந்த குழந்தையை வெகு ஜாக்கிரதையாய் வளர்த்தார்கள். தக்க பருவத்தில் இவருக்கு வித்தியாரம்பம் செய்விக்கப்பட்டது. தக்க ஆசிரியரை நியமித்து அவருக்கு அரண்மனையிலே கல்வி பயிற்றி வந்தன[illegible].

4. இங்கிலாந்தின் சிங்காதனத்திற்கு உரியவராத லால் அவருக்கு பிரின்ஸ் அவ் வேல்ஸ் என்கிற பட்டப் பெயர் வழங்கலாயிற்று. அல்பேர்ட் இளவரசரும் மகாராணியும் தங்கள் குமாரருக்கு எவ்வெவ் விஷயங்களை அவசியம் கற்பிக்க வேண்டுமோ அவையனைத்தையும் முறையாகக் கற்பித்து வந்தனர். ஆகையால் இளவரசராம் எட்வர்ட் நுண்ணிய அறிவும் கூர்ந்த புத்தியும் உடல் நலமுமுடையவராய் வளர்ந்து தக்க பருவத்தை யடைந்து சிறந்த அரசிளங்குமரரானர்.

5. அதுமுதல் மகாராணி, அரசாங்க விஷயங்களை யாலோசிக்கும் பொருட்டும், சமூக நலத்தின் பொருட்டும் நடத்தப்படும் கூட்டங்களுக்கு அவரையும் அழைத்துவந்து அவருக்கும் அவ் விஷயங்களில் பயிற்சி யுண்டாகச் செய்தார். மந்திராலோசனைச் சபைகளுக்கும் அவரை வருவிப்பது மகாராணிக்கு வழக்கம். அவர் அச்சபைகளுக்கு, தமது தாயாரோடு சென்று அங்கு நடக்கும் விஷயங்களை மிக நுட்பமாய்க் கவனித்து வந்தார்.

6. இளவரசருக்குக் கற்பிக்க வேண்டிய கல்விகள் யாவும் முற்றுப் பெற்றன. அவருக்குத் தக்க பருவம் வந்தது; உடனே மகாராணி அவரை இராஜாங்க விஷயங்களிலும் பயில்வித்து வந்தார். பல தேசங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்து அவ்வத் தேசத்து மக்களுடைய நடை, உடை, பாவனை, பழக்க வழக்கங்கள், தேசங்களின் தன்மை முதலியவைகளைக் கண்டறிந்தார்.

7. அப்பால் அவருக்கு விவாகம் நடந்தது. அவர் டேன்மார்க் தேச அரசருடைய குமாரியாகிய அலெக்ஸான்டிரா ராணியை மணந்தனர். அவ்விவாகத்தின் பேருக தோன்றிய பிள்ளைகளில் நமது ஜார்ஜ் சக்கரவர்த்தி ஒருவர்.

எட்வர்ட் இளவரசர் மகாராணி விக்டோரியாவுக்குப் பின்பே, பட்டத்துக்கு வர உரிமையுடையவர். மகாராணி, சுமார் அறுபத்து நான்கு வருஷம் அரசு செலுத்தினர். ஆகையால் அவர் அரசபதவியை அடைய நெடுங்காலம் சென்றது.

8. அவர் இளவரசராயிருந்த காலத்தில் ஒரு முறை மனைவியோடு இங்கு வந்து இத்தேசம் முழுவதையும் சுற்றிப் பார்த்துக் கொண்டுபோனர். அப்பொழுது இந்திய மக்களும், பிரபுக்களும், சுதேச மன்னரும் அவரை அன்புடன் உபசரித்து மிக்க மரியாதை செய்தனர். அவர் இந்தியாவுக்கு வந்தமையால் மக்களுக்கு மிகுந்த நன்மை உண்டாயின.

9. அவர் மீண்டும் இங்கிலாந்திற்குச் சென்றபின் பல கூட்டங்களில் இந்தியாவின் சிறப்பில் தாமறிந்த விஷயங்களை எடுத்துக் கூறினர். அவருடைய தாயார் முதிர்ந்த வயதுடையவராகையால் அவர்களுக்கு இராஜாங்க விஷயங்களில் அரிய உதவிபுரிந்து வந்தார். மகாராணி 1901-ஆம் வருஷத்தில் இவ்வுலகை விட்டு உயிர் நீத்தார். உடனே எட்வர்ட் இளவரசர் இங்கிலாந்தின் அரசராகச் சிங்காதனமேறினர். அப்பொழுது அவருக்கு வயது அறுபத்தொன்று. எட்வர்ட் அரசர் இந்தியாவுக்கு நேரில் வந்து அப்பெரிய தேசத்தின் தன்மையை அறிந்தவர். இந்தியர்களால் நன்றாய் உபசரிக்கப் பெற்றவர். ஆகையால் இந்திய மக்களிடத்தில் அவருக்கு மிக்க அன்புண்டு ; அவர் அரசரான பின் இந்தியா சம்பந்தமான விஷயங்களை வெகு ஜாக்கிரதையாய்க் கவனித்து வந்தார்.

10. அவர் அரசாட்சி செய்தகாலத்தில் பெரியயுத்தங்கள் ஒன்றும் நடைபெறவில்லை. அவர் எப்பொழுதும் சமா

தானத்தையே விரும்பும் இயல்பினர். அவர் உயிரோடிருந்து அரசு செலுத்தின ஒன்பது வருஷங்களில் இங்கிலாந்திற்கும் பிற நாடுகளுக்குமிடையில் சமாதான உடன்படிக்கைகளை ஏற்படுத்தினர்; ஆகையால், அவருக்கு, சமாதானப் பிரியரான எட்வர்ட் என்று பெயருண்டாயிற்று.

11. எட்வர்ட் அரசர் 1910-ஆம் வருஷம் காலஞ்சென்றார். அவர் இறந்தபின் ஜார்ஜ் என்னும் பெயருள்ள அவர் குமாரர் இங்கிலாந்தின் அரசரும் நமது சக்கரவர்த்தியும் ஆனார். அவரே இப்பொழுது நமது தேசத்தை ஆண்டு வருகிறார். ஈசன் அவரைக் காப்பாராக

---

15. இராமானுஜர்.

1. இராமானுஜர் என்னும் பெரியார், வைணவ மதத்தை விளங்கச் செய்த சமயாசாரியர்களுள் ஒருவர். அவர் அந்தணர் குலத்திற் பிறந்தவர். அவர் பதினோராம் நூறாண்டில் சென்னைக்கும், காஞ்சீபுரத்திற்கும் இடையிலுள்ள ஸ்ரீ பெரும்பூதூரிற் பிறந்தவர். அவருடைய தந்தையாருக்குக் கேசவப் பெருமாள் என்றும், தாயாருக்குப் பூமிப் பிராட்டியார் என்றும் பெயர்.

2. இராமானுஜர், மிகவும் ஏழையான குடும்பத்திற் பிறந்தவர். அவர் சிறுவராயிருக்கும் போதே அவருடைய தந்தையார் இறந்துபோனார். ஆகையால் அவருடைய நெருங்கிய உறவினரில் ஒருவர் அவரை மிகவும் அன்புடன் வளர்த்துவந்தார். அவர் நன்றாய்க் கல்விகற்றுப் புத்திமானாகவும் திருமாலிடம் மிக்க பக்தியுடையவராகவும் விளங்கினர்.

3. உரிய காலத்தில் அவருக்கு நாமகரணம் உபநயனம் முதலிய சுபச் சடங்குகள் நடந்தேறின. அவர் முறைப்படி வேதாத்தியயனம் செய்விக்கப் பெற்றார். அப்பால் வேதாந்தம் கற்கக் கருதி அவர் விஷ்ணுத் தலங்களுள் சிறந்து விளங்கும் காஞ்சீபுரம் சென்று யாதவப் பிரகாசர் என்னும் துறவியினிடம் வேதாந்தம் கற்றார். அத்துறவி, இராமானுஜருடைய புத்திக் கூர்மையையும் தெய்வ பக்தியையும் கண்டு அவருக்கு வேதாந்த ரகசியங்களை நன்கு கற்பித்தார்.

4. வித்தியாப்பியாசம் செய்த பின்னர் அவர் விவாகம் செய்து கொண்டு சிலகாலம் சுகமாய் வாழ்ந்திருந்தார்; ஆயினும், அவருக்கு இல்வாழ்க்கையில் வெறுப்பு உண்டாயிற்று. மத ஆராய்ச்சிக்கும், மத நூல்களைச் செய்வதற்கும் திருமாலுக்குத் தொண்டு ஆற்றுவதற்கும் இல்வாழ்க்கை

ஏற்றதல்லவென்று கருதினர். ஆகையால் அவர் காஷாயம் வாங்கிக்கொண்டு துறவியானர்.

5. சந்நியாசியான பின் அவர் காஞ்சீபுரத்தை விட்டு ஸ்ரீரங்கம் சென்று அங்கே வசித்தார். அவர் அங்கு வசித்தகாலத்தில் வைணவமதவுண்மைகளை முறைப்படுத்தி அவற்றை விளக்கிச் சில நூல்களைச் செய்தார். இவ்விதம் அவர் மிக்க புகழடைந்தார். வைணவ மத உயர்வைக் குறித்து அவர் அடிக்கடி பிரசங்கங்கள் செய்தார். பலர் அவருடைய போதனைகளைக் கேட்கவும், தங்களுக்குள்ள சந்தேகங்களை நிவிர்த்தி செய்து கொள்ளவும் அவரிடத்தில் அடிக்கடி வருவதுண்டு. அவருடைய போதனைகளால் வைணவ மதம் வளர்ந்தது.

6. அக்காலத்திற் சோழநாட்டில் அரசு செலுத்தின அரசனுக்குக் குலோத்துங்கன் என்று பெயர். அவன் சிறந்த சைவன். இராமானுஜர், வைணவமதப்பிரசங்கங்கள் செய்வதையும் அனேகர் வைணவராவதையும் சைவம் தாழ்வடைவதையும் அவன் கண்டான். ஆகையால் அவன் "சிவனிலும் சிறந்த தெய்வம் வேறில்லை" என்று ஒரு ஓலையில் எழுதி அதற்கு இராமானுஜரைக் கையெழுத்திட வருமாறு உத்தரவு செய்தான்.

7. இராமானுஜர் அப்படிச் செய்ய மறுத்து ஸ்ரீரங்கத்தைவிட்டு மைசூர் ராஜ்யம் போய்விட்டார். அவர் ஸ்தானத்தில் அவருடைய சீடராகிய கூரத்தாழ்வார் இருந்தார். அரசனுடைய ஏவலாளர் அவரைக் கையெழுத்திடும்படி வற்புறுத்தினர்கள். அவர் மறுத்துவிட்டார். ஆகையால் அரசன் உத்தரவுப்படி ஏவலாளர் அவருடைய கண்களைப் பிடுங்கிவிட்டார்கள். இராமானுஜர் அதைக் கேள்விப்பட்டு மிக்க விசனமடைந்தார்.

8. அக்காலத்தில் மைசூரை ஆண்ட அரசனுக்கு விட்டலதேவராயன் என்று பெயர். அவனும் அவன் குடிகளும் சமணர். இராமானுஜர், சமண மதத்தைக் கண்டித்து வைணவமத உயர்வைப் போதித்தார். அரசனும் அவனைச் சார்ந்தவரும் வைணவராயினர்; இராமானுஜர், அரசனுக்கு விஷ்ணுவர்த்தனன் என்று பெயரிட்டார். பல விஷ்ணு ஆலயங்களை அங்கே கட்டுவித்தார்.

9. வைணமத உயர்வையும், தாம் அம்மத சம்பந்தமாய் முறைப்படுத்திய உண்மைகளையும் இந்தியா வெங்கும் பரவச்செய்ய அவர் உறுதிகொண்டார். ஆகையால் அவர் காசி, காஷ்மீரம், டில்லி முதலிய பல இடங்களுக்குச் சென்று பிரசங்கங்கள் செய்தார். முற்காலத்தில் அரசு செலுத்தின பல முகம்மதிய அரசர்கள், இந்துக்களுடைய கோயில்களை இடித்துப் பல விஷ்ணு விக்கிரகங்களை எடுத்துக்கொண்டு போய் டில்லி நகரில் சேர்த்து வைத்திருந்தார்கள். அவைகளை டில்லிச் சக்கரவர்த்தியிடத்தில் கேட்டுவாங்கி, மைசூரில தாம் புதிதாய்க் கட்டின கோயில்களில் அவர் பிரதிஷ்டை செய்தார்.

10. இராமானுஜர், மிக்க அனபும் தயாளகுணமுமுடையவர். அவர் எல்லாசசாதியாரையும் சகோதரராகவே எண்ணினர். திருநாராயணபுரம் என்னும் விஷ்ணுத்தலத்தில் உற்சவம் நடக்கும்போது, ஆதிதிராவிடரும் கோயிலுக்குட் சென்று பெருமாளைச் சேவிக்க அவர் ஏற்பாடு செய்தனர். அந்த வழக்கத்தை இப்பொழுதும் அந்தக் கோயிலில் காணலாம்.

11. இராமானுஜர் தெய்வபக்தியிற் சிறந்தவர். சிறந்த கல்விமான். அவர் பல நூல்களைச் செய்திருக்கிறர். அவை

களில் அவர் செய்த பிரம சூத்திர பாஷியம் சிறந்தது. அவர் போதித்த மதத்திற்கு விசிஷ்டாத்துவிதம் என்று பெயர். அவர் இவ்விதம் வைணவ மதத்தைப் பிரசித்தியடையச் செய்தார். ஆகையால் வைணவர்கள் அவரைத் தெய்வமாகவே பூசித்து வருகிறார்கள். அவருக்கென்று தனியாய்க் கோயில்களை அமைத்திருக்கிறார்கள். பல விஷ்ணுவாலயங்களில் அவருடைய விக்கிரகத்தை வைத்து வணங்கியும் வருகிறார்கள்.

---

16. பருவ காலங்கள்

1. நாம் ஒவ்வொரு நாளும் கிழக்கில் சூரியன் தோன்றுவதைப் பார்க்கிறோம். சூரியன் தோன்றும் காலத்திற்கு உதயகாலம் என்று பெயர். அக்காலம் சாதாரணமாய்க் குளிர்ச்சியாகவே இருக்கும். அப்பொழுது நாம் எவ்வித வேலையையும் வருத்த மின்றிச் செய்யலாம். உதயகாலத்திற்குப் பின் வெப்பம் சிறிதுசிறிதாக அதிகப்படுகிறது. சூரியன் நமது தலைக்கு மேல் உச்சிக்கு வந்துவிடுகிறது. அதற்கு உச்சிப்போழுது அல்லது மத்தியான்னம் என்று பெயர். அப்பொழுது வெயில் அதிகமாயிருக்கும். வெப்பத்தைத் தாங்க நம்மால் முடியாது; வேலை யொன்றும் செய்ய வியலாது. ஆகையால்தான் வேலை செய்பவர் மத்தியான்னத்தில் சிறிது நேரம் ஓய்வு கொள்ளுகிறார்கள். அப்பால் சூரியன் சிறிது சிறிதாய்க் கீழேயிறங்கி மேற்குத் திசையில் மறைந்து போகிறது.

2. சூரியன் மேற்குத்திசையில் மறைகிற காலத்திற்கு அஸ்தமான காலம் என்று பெயர். அப்பொழுதும் குளிர்ச்சியாகவே இருக்கும். அக்காலத்தில் நாம் எவ்வித வேலையையும் வருத்தமின்றி இன்பமாகச் செய்யலாம்.

3. இப்பொழுது ஒருநாளிற் பல பாகங்கள் உண்டென்றும், அவ்வப்பாகங்களுக்கு வெவ்வேறு பெயரும் குணமும் உண்டென்றும் நமக்குத் தெரிகிறது. அது போலவே ஒருவருஷத்திலும் பல பாகங்கள் உண்டு. அவைகளுக்குப் பருவங்கள் என்று பெயர். பூமி ஒரு முறை சூரியனைச்சுற்றி வருகிற கால அளவுக்கு வருஷம் என்று பெயர். வருஷத்தில் ஆறுமாதம் சூரியன் வடக்கு நோக்கியும், ஆறுமாதம் தெற்கு நோக்கியும் நகர்ந்து செல்வது போல நமக்குத் தோன்றுகிறது. இப்படி நகர்வதற்கு அயனம் என்று பெயர்.

4. சூரியன் வடக்கு நோக்கி நகர்வதற்கு உத்தராயணம் என்றும், தெற்கு நோக்கி நகர்வதை தட்சிணாயணம் என்றும் சொல்லுவார்கள். தை மாத முதல் ஆனி மாதம் வரையில் உத்தராயணம்; ஆடி மாத முதல் மார்கழி மாதம் வரையில் தட்சிணாயணம். ஆகையால் ஒரு வருஷத்தில் இரண்டே அயனங்கள் உள்ளன. உத்தராயணத்தில் பகற்காலம் நீண்டும், தட்சிணாயணத்தில் இராக்காலம் நீண்டும் இருக்கும்.

5. ஒரு வருஷத்தை நமது முன்னோர் ஆறுபாகங்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவை, கார்குளிர் அல்லது கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என வழங்கப்படும். ஆவணியும் புரட்டாசியும் கார்காலம்; ஐப்பசியும் கார்த்திகையும் குளிர்காலம்; மார்கழியும் தையும் முன்பனிக்காலம்; மாசியும் பங்குனியும் பின்பனிக் காலம்; சித்திரையும் வைகாசியும் இளவேனிற்காலம்; ஆனியும் ஆடியும் முதுவேனிற்காலம்.

6. கார்காலத்தில் மேகங்கள் ஆகாயத்தில் நிறைந்திருக்கும். மழை அதிகமாகப் பெய்யும். மரம் செடி புல் பூண்டுகள் தழைத்து வளரும். மரம் செடிகளில் பூ,

காய், கனி, அதிகமாய்க்காணப்படா. குளிர்காலத்தில் மழை பெய்து தரை ஈரமாயும் குளிர்ச்சியாயு மிருக்கும். ஆகையால் பலவித நோய்கள் மனிதரைப் பீடிக்கும். இது சுகத்திற்கு ஏற்றதன்று; முன் பனிக்காலத்தில் மாலைப் போதில் பனி பெய்யும். நெற்பயிர்களும் எல்லாப் புல் பூண்டுகளும் செழித்து வளரும்.

7. பின்பனிக்காலத்தில் காலைப்போதில் பனி அதிகமாகப் பெய்யும். புல் நுனிகளிலும் இலைகளிலும் பனித்திவலைகளைக் காணலாம். இக்காலத்திலும் குளிர் அதிகமுண்டு. இக்காலத்தில்தான் பயிர்கள் முற்றி பயனளிக்கும். இளவேனிற்காலத்தில் குளிர் இராது. உஷ்ணம் சிறிதுசிறிதாய் அதிகரிக்கும். ஆகாயத்தில் மப்பு மந்தாரம் இரா. பூக்களும் பழங்களும் அளவின்றி அகப்படும். காலையில் குளிர்ந்த காற்று வீசும்; பறவைகள் இன்பமாய்ப் பாடும். முதுவேனிற்காலத்தில் உஷ்ணம் தாங்க முடியாது. ஆறு, ஏரி, குளங்களில் நீர் வற்றிப் போம். ஆயினும் வேனிற்காலத்தையே பருவங்களில் சிறந்ததாக மதிக்கிறார்கள். இக்காலத்தில்தான் நாம் கல்யாணம் முதலிய சுபகாரியங்களை நடத்துகிறோம்.

---

17. செட்டியார் தந்திரம்

1. ஓரூரில் மணவாளச் செட்டி என்ற பெயருள்ள வியாபாரி யொருவன் இருந்தான். அவனுக்குக் கல்வியறிவு சிறிதும் இல்லை. அவன் அவ்வூரில் 'பலசரக்குக் கடை' வைத்து எளிய வாழ்க்கையை நடத்திவந்தான். ஒருநாள் அவன், நெய்ச்சாடியை மூடாமல் வைத்து விட்டுப் போய்விட்டான். நெய் அதிக வாசனையுடன் இருந்ததால்

அவன் கடையிலிருந்த பூனை நெய் முழுவதையும் குடித்து விட்டது.

2. மறுநாள் செட்டி கடையைத் திறந்து பார்த்த போது நெய்யைப் பூனை குடித்து விட்டதாகத் தெரிந்து கொண்டான். அந்தப் பூனை கடையிலேயே உட்கார்ந்திருந்தது. அதைப் பார்க்கவே செட்டிக்குக் கோபம் மூண்டது. ஆகையால் அவன் ஒரு பெரிய கல்லையெடுத்துப் பூனையின் தலைமேல் போட்டான். உடனே பூனை இறந்து போயிற்று.

3. பூனையைக் கொல்வது மகா பாவமென்று அவன் முன்னேயே கேள்விப் பட்டிருந்தான்; ஆகையால் அவன் மிகவும் விசனப்பட்டு ஒரு பிராமணனை வருவித்து "சுவாமீ, நான் ஒரு பூனையைக் கொன்றுவிட்டேன்; அது மகா பாவமென்று எனக்குத் தெரிகிறது. அந்தப் பாவத்தை நீக்கிக் கொள்ள நான் என்ன செய்யவேண்டும்" என்றான்.

4. அதைக் கேட்ட பிராமணன், "செட்டியாரே, நீர் செய்த பாவம் மிகக் கொடியது. அஃது ஆயிரம் பிராமணரைக்கொன்றதற்குச் சமமானது. அதற்கு நரகமே தண்டனை; ஆயினும் நான் சொல்லுகிறபடி செய்தால் அந்தப்பாவத்தை எளிதிற் போக்கிவிடலாம். கொன்ற பூனையைப்போல் தங்கத்தால் ஓர் உருவம் செய்து ஒழுக்கத்திற் சிறந்த பிராமணனுக்குத் தானம் பண்ணினால் அந்தப் பாவம் உம்மை விட்டு விலகலாம் என்றான்.

5. செட்டி மிக்க தந்திர முடையவன்; அவன் பிராமணன் கருத்தைக்கண்டு, "என்ன சுவாமீ, இப்படிச் சொல்லுகிறீர்; எனக்கு அவ்வளவுக்குச் சக்தியில்லையே" என்றான். பிராமணன் அஃது இயலாவிட்டால் அதிகச் செலவில்லாமல் வெள்ளியினாலாவது செய்துவிடலாம்" என்றான்.

6. செட்டி—அதற்கும் எனக்குச் சக்தியில்லையே. ஏழைகள் பாபத்தைப் போக்கிக் கொள்வதற்கு ஏற்ற பிராயச்சித்தம் இல்லையா ?''

7. பிராமணன்—அப்படியானால், செம்பினாலாவது ஓர் உருவம் செய்து தானம் செய்யவேண்டும்; செம்பு சிவபெருமானுக்கு மிகவும் பிரீதியானது.''

8. செட்டி, வெகு கெட்டிக்காரன்; அவன் ஒரு பைசாவும் வீணாய்ச் செலவு செய்பவனல்லன்; ஆகையால் அவன் "சுவாமீ, அதுவும் என்னாலாகாது. நான் பாவத்தைக் கட்டிக்கொண்டு அதன் பலனை அனுபவித்தே தீர்த்துக்கொள்ளுகிறேன்; நீங்கள் போய்வாருங்கள்'' என்று சொல்லி ஒரு கும்பிடு போட்டான்.

9. பிராமணன்—"செட்டியாரே, எனக்கு ஒரு யுக்தி தோன்றுகிறது. நீர் வைசிய குலத்தைச்சேர்ந்தவர். ஆகையால் வெல்லத்தினால் ஒருருவம் செய்துவிடலாம். ஆனால் தட்சணை மாத்திரம் அதிகமாய்க் கொடுக்க வேண்டும்.''

10. செட்டி அதற்குச் சம்மதிப்பவனைப்போல நடித்து, வெல்லத்தினால் ஒருருவம் செய்தான். அதை முறைப்படி பிராமணனிடத்திற் கொடுத்துக் கும்பிட்டு, "சுவாமீ, என் பாவம் நீங்கிற்றா?'' என்றான்.

11. பிராமணன் "சந்தேக மென்ன? உன பாவம் தொலைந்தது'' என்று சொல்லிவிட்டு, வெல்லத்தைக் கையில் எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போகப் புறப்பட்டான். செட்டி, சமயம் பார்த்து அவன் கையிலிருந்த வெல்லத்தைப் பிடுங்கிக்கொண்டு "சுவாமீ, பூனையைக் கொன்ற பாவம் உம்மைச் சேர்ந்துவிட்டது; வெல்லம் தின்ற பாவம்

மாத்திரம் என்னுடையது" என்று சொல்லிக்கொண்டு தன் கடைக்குச் சென்முன். பிராமணன் ஏமாந்து விசனத்தோடு தன் வீட்டுக்குப் போனன்.

18. அரிய சில உரைகள்.

இதைவிட இது அரிதெனல்

1. அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானிட ராதல் அரிது
மானிட ராயினும் கூன் குருடு செவிடு
பேடு நீக்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலேயும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலேயும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
தானமும் தவமும் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே.

இதைவிட இது கொடியது எனல்

2. கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை
அதனினும் கொடிது ஆற்றெணுக் கொடுநோய்
அதனினும் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினும் கொடிது இன்புற
அவர் கையில் உண்பது தானே.

இதைவிட இது இனியது எனல்

3. இனியது கேட்கின் வரிவடி வேலோய்
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள் ளோரைக்
கனவிலும் நினைவிலும் காண்பது தானே.

---

19. பழமொழிகள்.

1. அரசன் அன்றேறுப்பான் தெய்வம் நின்றேறுக்கும்.
2. அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்.
3. அகதிக்குத் தெய்வமே துணை.
4. அடாது செய்தவன் படாதது படுவேன்.
5. அன்னமிட்ட வீட்டில் கன்னமிடலாமா?
6. ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு.
7. ஆனைக் கொருகாலம் பூனைக் கொருகாலம்.
8. ஆனையும் அறுகம் புல்லில் தடுக்குண்ணும்.
9. ஆடையில் லாதவன் அரை மனிதன்.
10. ஆற்றிலே ஒருகால் சேற்றிலே ஒருகால்.
11. ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுததாம்.
12. ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
13. இன்றைக்கு இருப்பாரை நாளைக்குக் காணோம்.
14. இரும்பைச் செல்லரிக்காது.
15. இனியது மொழிதல் என்றும் நன்று.
16. இறைத்த கிணறுதான் ஊறும்.
17. இரக்கப் போனாலும் சிறக்கப்போ.
18. இலையும் பழுப்பும் எங்குமுண்டு.

19. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
20. உரலில் அகப்பட்டால் உலக்கைக்குத் தப்புமா.
21. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமா.
22. கரும்பு தின்னக் கூலி வேண்டுமோ
23. கரேட்புப் பகை காட்டும். [மிடம் அறியார்.
24. கடுது போனவிடம் ஆராய்வர், மிளகுபோகு
24. கடலிலே பெருங்காயத்தைக் கரைப்பது போல.
26. காரியம் பெரிதோ வீரியம் பெரிதோ.
27. காலைச்சுற்றிய பாம்பு கடித்தே தீரும்.
28. காய்க்கிற மரத்துக்குக் கல்லெறி அதிகம்.
29. காடு வாவென்கிறது வீடு போவென்கிறது.
30. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற் போல.
31. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்.
32. குங்குமம் சுமந்த கழுதைபோல.

---

20. தண்ணீர்.

1. இவ்வுலகில் மனிதனுக்கு உபயோகமாகக் கடவுள் பல பொருள்களைப் படைத்திருக்கிறார். அவற்றை மூன்று பாகமாகப் பிரிக்கலாம். சில கல்லைப்போலக் கெட்டியானவை. அவைகளுக்குத் திடபதார்த்தங்கள் என்றுபெயர். சில நீர்வடிவாயிருக்கின்றன. அவைகளுக்குத் திரவ பதார்த்தங்கள் என்று பெயர். இவை இரண்டும் கண்ணுக்குத் தோன்றுவன. சில கண்ணுக்குத் தோன்றாத வாயு ரூபாயிருக்கும்; அவைகளுக்கு வாயு பதார்த்தங்கள் என்று பெயர்.

2. தண்ணீர் திரவபதார்த்தங்களில் ஒன்று. அதை நாம் எப்பொழுதும் உபயோகிக்கிறோம். தண்ணீர் இல்லா

விட்டால் மனிதனுவது பிறஜீவர்களாவது உயிரோ டிருக்கமுடியாது. பயிர் பச்சைகளாவது, மரம்செடி கொடி களாவது பூமியில் வளரமாட்டா. எல்லாம் உலர்ந்து இவ் வுலகமே அழிந்துபோம். ஆகையால் தண்ணீர், இவ்வுலக மும் அதனிடமுள்ள சராசரங்களும் நிலைபெறுவதற்கு ஆதாரமாயுள்ளது.

3. தண்ணீர் நமக்கு மழையினுல் கிடைக்கிறது; ஆகையால் தான் கடவுள், இவ்வுலகைக் காப்பதற்காகக் காலாகாலங்களில் மழை பெய்யச் செய்திருக்கிருர். மழை நீர் எவ்வித மாசும் இல்லாதது. மிக்க சுத்தமானது. வானத்திலிருந்து விழும்போது அதற்கு நிறம், சுவை, குணம் ஒன்றுமில்லை. பூமியில் வீழ்ந்தபின் அது பலவித நிறம், சுவை, குணம் ஆதியவற்றைப் பெறுகிறது.

4. தண்ணீர் மேட்டிலிருந்து எப்பொழுதும் பள்ள த்தை நாடிச்செல்லும் இயல்பையுடையது. பூமியில் விழும் மழையில் சிறிதுபாகம் நிலத்தில் ஊறிக் கீழே கற்பாறை அல்லது களிமண் இருக்கும் இடம் வரையிற் சென்று அங்குத் தங்கி விடுகிறது. அங்கு இவ்விதம் பல பக்கங் களிலிருந்து வரும் ஜலமெல்லாம் சேர்ந்து பூமிக்குக்கீழ் ஒரு சிற்ருறுபோல் ஓடுகிறது. கற்பாறை களிமண்தரை இவைகளினூடே ஜலம் ஊறிச் செல்லாது. கிணறுகளை யாவது ஆழமான குளங்களையாவது தோண்டும்போது இந்த ஜலம் நீரூற்ருய் வெளிப்படுவதை நாம் காண்கிருேம். இப்படி அகப்படும் ஜலத்திற்கு, 'ஊற்று நீர்' என்று பெயர். இது சுத்தமாயிருக்கும். மழைநீர் தரையில் விழுந்தபின் அசுத்தமடைந்த போதிலும், அது மண்ணில் ஊறிக் கீழே செல்லும்போது அதிலுள்ள அசுத்தங்களெல்லாம், அடுக் கடுக்காயிருக்கிற மண்ணிலே தங்கிவிடுகின்றன. அவ்விதம்

கீழே செல்லும் ஜலம் வடிக்கட்டின ஜலம்போலச் சுத்தமாய் விடுகிறது. கிணறுகளின் ஜலம் சுத்தமாயிருப்பதற்குக் காரணம் இதுவே.

5. பூமியில் விழும் மழை நீரின் மற்றொருபாகம் பூமியின்மேல் ஓடி சிறுவாய்க்கால்களாகவும், சிற்றாறுகளாகவும், பேராறுகளாகவும் மாறி, பள்ள வழியாகப் பாய்ந்து கடைசியில் கடலில்விழுகிறது. இவ்வாறு செல்லும்போது அந்த நீரில் அசுத்த பதார்த்தங்கள் பல கரைந்து அதைக் கெடுத்துவிடுகின்றன.

6. மழை நீரின் மற்றொருபாகம், பூமியிலுள்ள பள்ளங்களில் நிற்கின்றது. அவைகளை நாம் குளங்கள் என்றும் ஏரிகள் என்றும் சொல்லிக் கொள்ளுகிறோம்; அவைகளிலுள்ள நீர் சுத்தமானதன்று; ஆகவே அந்த ஜலம், ஸ்நான பானங்களுக்கு ஏற்றதன்று; மழைநீர் அல்லது ஆழமான கிணற்று நீரே பானத்துக்கு ஏற்றது. அவ்வகையான தண்ணீருள்ள கிணற்றுக்கு நல்ல தண்ணீர்க்கிணறு என்று பெயர். அப்படிப்பட்ட கிணறுகளை நாம் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும்.

7. கிணறுகளுக்குச் சமீபத்தில் மரம் செடிகளை வைத்து வளர்க்கக்கூடாது. அப்படிச் செய்தால் அவற்றிலிருந்து இலைகள் ஜலத்தில் விழுந்து அழுகி ஜலத்தைக் கெடுத்துவிடும். கிணற்றுக்குள் அசுத்த ஜலம் செல்லாதபடி அதைச் சுற்றிக் கைப்பிடிச் சுவர் கட்டவேண்டும். கிணற்றைச் சுற்றியுள்ள இடம் வெகு சுத்தமாயிருக்க வேண்டும். கிணறுகளுக்குச் சமீபத்தில் மல ஜலங் கழித்தலும் வேறு வகையான அசுசிசெய்தலும் கூடா.

8. சில கிராமங்களில் ஜனங்களுக்குவேண்டிய ஜலத்தைக் குளங்களில் தேக்கி வைக்கிறார்கள். அவ்விதமான குளங்களை வெகு சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். அவைகளிலிறங்கி ஸ்நானம் செய்தலும், துணிகளைத் துவைத்தலும், ஆடு மாடுகளைக் குளிப்பாட்டுதலும் கூடாது. அசுத்த நீரைப் பானம்பண்ணினால் பல நோய்கள் உண்டாகும். ஜீவாதாரமானது தண்ணீர். விஷஜுரம், விஷபேதி, அம்மை முதலிய நோய்கள் அசுத்த ஜலத்தைப் பருகுவதனாற் பரவுகின்றன வென்பது தேர்ந்த வைத்தியர்களுடைய கொள்கையாம்.

9. தண்ணீர் சுத்தமாக நமக்கு அகப்படுதல் அரிது. அது வெகு விரைவில் அசுத்தமாகும்; அழுக்கு ஜலத்தில் நமது கண்களுக்குத் தோன்றாத எண்ணிறந்த கிருமிகள் உண்டு. தொற்று நோய்களையும் வேறு பல வியாதிகளையும் அவைகளே பரவச் செய்கின்றன; ஆகையால் நமக்கு எவ்விதமான ஜலம் அகப்பட்டபோதிலும் அதைக் காய்ச்சி வடிக்கட்டிச் சாப்பிடுவது நல்லது. தண்ணீரைக் காய்ச்சினால் அதிலுள்ள கிருமிகள் இறந்துபோகின்றன. வடிக்கட்டினால் அதிலுள்ள அசுத்தமெல்லாம் நீங்கி விடுகின்றன. ஆகையால் ஜலத்தை எப்பொழுதும் காய்ச்சி ஆற வைத்துச் சாப்பிடவேண்டும்.

10. நமது தேகத்தில் இரத்தம் பரவி ஓடிக்கொண்டிருக்கிறது. நாம் அடிக்கடி ஜலத்தைப் பானம் பண்ணாவிட்டால் இரத்தம் தடிப்பாகி இரத்தக் குழாய்களில் ஓடாமல் நின்றுவிடும். அப்பொழுது மரணம் நேரிடும். நாம் உயிரோடிருப்பதற்கு ஜலம் அவசியமானது. அது சுத்தமாக இருக்கவேண்டும்.

———



21. ஏரோப்பிளேன் என்கிற ஆகாய விமானம்.

1. மனிதர் ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குப் பிரயாணம் செய்ய அனுகூலமாகப் பல கருவிகளை உபயோகிக்கிருர்கள். நீராவியந்திரத் தொடர், மோட்டார் வண்டி, குதிரை வண்டி, மாட்டு வண்டி முதலியவைகளைக் கரைவழி செல்லுகிறவர் கையாளுகின்றனர். கடலைத் தாண்டிச் செல்பவர் நீராவிக் கப்பல்களையும் வேறுவகையான மரக்கலங்களையும் பயன் படுத்துகிருர்கள். ஆகாய வீதியிற்பிரயாணம் செய்வதற்கும் இப்பொழுது ஒரு சாதனத்தைப் புதிதாய்க் கண்டுபிடித்திருக்கிருர்கள்; அதற்கு 'ஆகாய விமானம்' என்று பெயர்.

2. புராணங்களிலும் இதிகாசங்களிலும் இவ்வித விமானங்கள் முற்காலத்தில் வழங்கி வந்தன என்று சொல்லப் பட்டிருக்கின்றது இராமன் ஆகாய மார்க்கமாய் விமானத்தில் அயோத்தி சென்ருனென்று இராமாயணத்தால் நமக்குத் தெரிகிறது. உண்மையில் ஆகாய விமானம் உபயோகத்தில் இருந்ததாவென்று பிற்காலத்தில் சந்தேகித்த

வரு முண்டு; ஆயினும், இப்பொழுது ஏற்பட்டிருக்கும் விமானங்கள் அச் சந்தேகத்தை நீக்கிவிட்டன.

3. இதுவரையிலும் மக்கள் சாதாரணமாய்த் தரை வழியாகவும், கடல் வழியாகவுமே பிரயாணம் செய்து வந்தார்கள். இப்பொழுது ஆகாய மார்க்கமாய்ச் செல்வதற்கும் புதியதொரு வாகனத்தை அமைத்திருக்கிறார்கள். ஏரோப்பிளேன் அல்லது ஆகாய விமானம் என்கிற அந்த வாகனம் ஒரு விதமான யந்திரம். எல்லா வாகனங்களையும் விட நூதனமானது; மிகுந்த வேகமாய்ச் செல்லக் கூடியது; ஆகாயத்திலுள்ள காற்றில் அது மிதந்து செல்லவல்லது.

4. ஆகாய விமானத்தை முதலில் அமைத்தவர்கள், பறவைகள் ஆகாயத்தில் எப்படிப் பறக்கின்றனவென்று யோசிக்கலாயினர். அவைகள் காற்றில் நிலைத்து எவ்வாறு வேகமாய்ச் செல்கின்றனவென்றும், பறப்பதற்கு அவசியமான துணைக்கருவிகள் எவையென்றும் கண்டறிய முயன்றார்கள். பறவைகளைப்போலத் தாமும் பறக்க முயற்சித்தார்கள். அவர்கள் செய்த முயற்சி யொன்றும் பலன் தரவில்லை. அவை பயன்பட்ட போதிலும் பொது மக்களுக்குப் பயன் படாது என்று அவர்கள் தெரிந்து கொண்டார்கள். ஆகையால் ஆகாயத்திற் பறந்து ஜனங்களையும் பொருள்களையும் ஏற்றிச் செல்லக்கூடிய ஒரு யந்திரத்தை அமைக்க நீண்ட நாள் முயன்றனர்.

5. காற்றாடி ஆகாயத்திற் பறக்கிறதல்லவா? அது போல ஆகாயத்தில் ஏன் ஒரு யந்திரம் பறக்கக்கூடாது என்று அவர்கள் சிந்தித்தார்கள். அப்படிப்பட்ட ஒரு யந்திரத்தைச் செய்வதற்கு அவசியம் வேண்டியவைகள் எவையென்று ஆராய்ந்து பார்த்தார்கள். ஆகாயத்தில் பறக்கக்

கூடிய யந்திரம் பறவைபோன்ற உருவமுடனிருக்க வேண்டுமென்று அவர்கள் நிச்சயித்துக் கொண்டார்கள். அதன் பின் அவர்கள் பறவையைப்போல ஒரு யந்திரம் அமைத்தார்கள். அந்த யந்திரம் ஆகாயத்தில் பறப்பதற்குப் பறவைகளின இறகுகளைப்போல நீண்ட இரண்டு தகடுகளை அதன் இரு புறத்திலும் அமைத்தார்கள். அது காற்றில் நிலைபெற்று நிற்க அனுகூலமாகக் காற்றுடியைப் போல அதற்குப் போதிய அளவு வாயொன்று அமைத்தார்கள்.

6. இவ்விதம் முதன் முதல் ஆகாய விமானமொன்று செய்யப்பட்டது. பின்னர், பல பரீட்சைகளைச் செய்து ஒன்றன்பின் ஒன்றாகப் பல விமானங்கள் செய்யப்பட்டன. அவை ஒன்றைவிட ஒன்று திருத்த முடையனவாகவே இருந்தன. ஈற்றில் சிறிது மேலான விமான மொன்றைச் செய்து முடித்தார்கள். அதில் பொருள்களை ஏற்றிக்கொண்டு போகவும், பிரயாணிகள் ஏறிச் செல்லவும் போதிய அளவு வசதிகள் அமைக்கப்படவில்லை. எல்லா வசதிகளும் அமைந்ததொரு பூரணமான யந்திரத்தைச் செய்து முடிக்கவேண்டுமென்று பற்பல தேசத்து யந்திர நிபுணர்கள் பெருமுயற்சி செய்தார்கள். முதலில் ஒரு மனிதனைத் தூக்கிக்கொண்டு செல்லவல்ல யந்திரமொன்றைச் செய்யப் பெருமுயற்சி செய்யவேண்டியிருந்தது.

7. அவ்வித யந்திரமொன்றை முதலிற் செய்தவர்கள் ரைட்ஸ் என்கிற இரண்டு சகோதரர்கள்; முதன் முதல் ஆகாயத்திற் பறந்தவர்கள் அவ்விரு சகோதரருமே. அவர்களில் ஒருவருக்கு வில்பர் ரைட் என்றும், மற்றவருக்கு ஆர்வில்லி ரைட் என்றும் பெயர். இவர்கள் செய்த பெரு

முயற்சியின் பலனாக இப்பொழுது ஆகாய விமானங்கள் பற்பல தேசங்களில் எளிதிற் செய்யப்படுகின்றன.

8. ஆகாய விமானத்தின் உருவம் ஏறக்குறைய ஒரு பறவையின் உருவத்தைப் போலவே இருக்கும். விமானத்தின் முற்புறத்தில் வேகமாய்ச் சுழலக்கூடிய கைகள் போன்ற இரண்டு உறுப்புக்கள் உண்டு. விமானத்தின் மேற்புறத்தில் பட்டுபோல உட்கவிந்த ஒருபாகமுண்டு. அந்தப் பாகத்தில் பிரயாணிகளும் சாமான்களும் இருத்தற்கு உரிய இடம் அமைக்கப்பட்டிருக்கும். விமானத்தின் முற்புறத்தில் மோட்டார் வண்டியின் என்ஜினைப் போன்றதொரு என்ஜின் உண்டு. அது மிக்க பலமுள்ளது. அது பெட்ரோல் என்கிற மண் எண்ணெயால் இயங்குவது. அதன் சக்தியால் முற்புறமுள்ள இருகைகளும் வேகமாய்ச் சுற்றும்.

9. ஆகாய விமானத்துக்கு நீண்ட வாலுண்டு. அது யந்திர சக்தியால் விமானம் மேலே ஏறவும், கீழே இறங்கவும், ஆகாயத்தில் நிலைத்து நிற்கவும், துடுப்பைப்போல் உபயோகப்படுகிறது. ஆகாய விமானத்தைத் திசையறிந்து ஓட்டுவது எளிதன்று; அதை ஓட்டுகிறவன் பறவை போன்ற அவ்விமானத்தின் கழுத்தில் அவனுக்கென்று ஏற்படுத்தப் பட்டுள்ள இடத்தில் உட்காரவேண்டும். அவன் யந்திரத்தை முடுக்கிவிடவே முற்புறமுள்ள கைகள் வெகு வேகமாய்ச் சுற்றத் தொடங்கும். அந்த வேகத்தினால் விமானம் மேலே கிளம்பி நிலைபெற்றுப் பறக்கத் தொடங்கும். அப்பால் அது யந்திர சக்தியால் வேகமாய்ப் பறந்து செல்லும்.

10. ஆகாயவிமானம் நன்றாய் வேலை செய்யவேண்டுமானால் அதன் ஒவ்வொரு பாகமும் கணக்குப்படி செய்யப்

படவேண்டும். ஆகாயவிமானத்தின் ஒவ்வொரு பாகமும் எவ்வளவு பளுவுள்ளதா யிருக்க வேண்டுமென்றும், அதை இயங்கச் செய்வதற்கு வேண்டிய என்ஜின் எவ்வளவு பலமுள்ளதாயிருக்க வேண்டுமென்றும் யந்திர நிபுணர் கணக்கிட்டிருக்கிறார்கள். அதன்படிச் செய்யப்படாத விமானங்கள் சாய்ந்து கீழே விழுந்துவிடும்.

11. ஆகாயவிமானங்கள் நமது தேசத்தில் இன்னும் அதிகமாய் உபயோகிக்கப்படவில்லை; ஆயினும், அவை மேலைத் தேசங்களில் மிகவும் சாதாரண பிரயாணசாதனங்களாய் வழங்கி வருகின்றன. ஐம்பது அறுபது பிரயாணிகளையும், சாமான்களையும் ஏற்றிக்கொண்டு பல விமானங்கள் கடல்களைத் தாண்டிச் செல்லுகின்றன. சமீபத்திலுள்ள ஊர்களுக்கும் ஜனங்கள் விமான மூலமாய்ப் பிரயாணம் செய்கின்றனர். இப்பொழுது இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குத் தபால்கள் ஆகாயவிமானங்கள் மூலம் அனுப்பப்படுகின்றன. மிகவிரைவில் நமது தேசத்திலும் ஆகாய விமானங்கள் பரவி விடும் என்பதில் ஐயமில்லை.

12. விமானங்கள் ஆகாயத்தில் வெகு வேகமாய்ச் செல்லக்கூடியவை. அவை மணியொன்றுக்குச் சாதாரணமாய் நூறு மைல் பறக்கக்கூடும். சில விமானங்கள் நூற்றைம்பது அல்லது இருநூறு மைல் பறக்கும். இந்த விமானத்தால் நாம் இனி வெகு வேகமாய் பிரயாணம் செய்யலாம். அதிசயமான இவ்வித கருவியை முதலில் நிருமித்த பேரறிவாளருடைய புத்தி பலம் மிகவும் வியக்கத்தக்கது.

13. நமது இராஜதானியிலும் இப்பொழுது சில பொதுமக்கள், ஆகாய விமானங்களை வருவித்துப் பறக்

கப் பயின்று வருகின்றனர். சிலர் சமீபத்திலிருக்கிற ஊர்களுக்குப் பறந்து போய் வருகிறார்கள். ஆகாய விமானங்கள் நமது நாட்டில் சாதாரண வாகனங்களாக வேண்டுமென்று நாம் கடவுளைப் பிரார்த்திப்போமாக.

---

22. கொள்ளை நோய்களைத் தடுப்பதெப்படி?

1. நமது தேசத்தில் வைசூரி, விஷபேதி, பிளேக், சுரம் முதலிய தொற்று நோய்கள் பல அடிக்கடி உண்டாகி, எண்ணிறந்த மக்களை வாரிக்கொண்டு போகின்றன. அவைகளுக்குக் கொள்ளை நோய்கள் என்று பெயர். பேதை மக்கள், அவை மாரி பிடாரி முதலிய சிறுதெய்வங்களால் உண்டாவனவென்றும் அத் தேவதைகளுக்குப் பூசை போடுவதனால் அவை நீங்கிவிடுமென்றும், அத் தேவதைகளுக்குப் பிரார்த்தனை செலுத்துகிறார்கள்.

2. கொள்ளை நோய்கள் நமது நாட்டில் உண்டாகாமல் தடுப்பதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? நாம் அவசியம் கவனிக்கவேண்டியவை சில உண்டு. பின்வரும் விஷயங்களை நீங்கள் நன்றாய் மனத்தில் பதித்து அதன்படி நடந்தால் கொள்ளை நோய்கள் உங்களை அணுகா:—

1. நாடோறும் ஸ்நானம் செய்து உங்கள் தேகத்தைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டும்.

2. வீடு முதலிய இடங்களை நன்றாய்ப் பெருக்கிக் குப்பை கூளங்களில்லாமல் வைத்திருக்கவேண்டும். வீடுகளுக்கு வருஷத்தில் இரண்டு முறையாவது வெள்ளையடிக்கவேண்டும். சாக்கடைகளை நன்றாய்க் கழுவிச் சுத்தம் செய்யவேண்டும். அழுக்கு நீர், சாக்கடைகளிலும்

வீட்டுப்புறத்திலும் தேங்கி நின்று, தீ நாற்றம் வீசாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

3. உங்கள் உடைகளும், படுக்கையும் சுத்தமாயும் சிறிது உஷ்ணமாயும் இருக்கவேண்டும். "கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்பது பழமொழி. எந்த உடையானாலும் அதில் எவ்வித அழுக்கும் சேராதபடி நன்றாய்த் தோய்த்துச் சுத்தி செய்தல்வேண்டும்.

4. எப்பொழுதும் நன்றாய் உடற்பயிற்சிசெய்து நலமுள்ளதாக உடலை வைத்துக் கொள்ளவேண்டும்.

5. உடலை வளர்க்கக்கூடியதும் எளிதில் ஜீரணிக்கக் கூடியதுமான ஆகாரத்தைச் சாப்பிடவேண்டும். பழஞ் சோறு, செங்காய், அழுகினபழம் இவைகள் உடல் நலத்தைக்கெடுப்பனவாகும். ஆதலால் இவைகள் உண்ணத் தகாதவை.

6. அருந்தும் நீர் சுத்தமானதாய் இருக்கவேண்டும். எப்படிப்பட்ட நீரையும் நன்றாய்க் காய்ச்சி வடிக்கட்டி உட்கொள்ளுவதே சிறந்தது.

7. உண்ணும்போது வயிறு கொண்ட மட்டும் சாப்பிடாமல் மிதமாய் உண்ணவேண்டும். மித போஜனம் சுக சாதனம்.

8. ஈரத்துணியோடு நெடுநேரம் இருத்தலாகாது.

9. வீண் கவலைகளுக்கு இடங்கொடுத்து மனத்தை வருத்தல் ஆகாது.

10. இராக்காலத்தில் அதிகநேரம் விழித்திருத்தல் கூடாது.

11. சுத்தமான காற்றைச் சுவாசித்தல் வேண்டும். அதிக பனியில் திரிதலும், ஆயாசத்தைத் தரும் வேலைகளைச் செய்தலும் கூடா.

12. நாம் உண்ணும் உணவை அப்படியே விழுங்கி விடாமல், நன்றாய் மென்று விழுங்கவேண்டும்.

13. தொற்று நோய்கள் நமது ஊரில் உண்டானால், அந்நோய் கண்டவரோடு வீணே கலந்து கொள்ளக் கூடாது.

14. நோய் கண்டிருக்கும் வீடுகளுக்குச் சமீபத்திலும் செல்லல் ஆகாது.

15. வைசூரி குத்திக்கொண்டால் அம்மை வாராது; வந்தாலும் அதிக உபத்திரவம் செய்யாது. அதைப் போலவே பிளேக், வாந்திபேதி முதலிய வியாதிகளுக்கும் மருந்து குத்திக்கொள்ளுகிறார்கள். அப்படிக் குத்திக் கொள்வது அந்நோய்கள் வராமல் தடுப்பதற்கேயாம்.

---

23. மக்கள் உடல் நிலையற்றது.

(பாடல்)

உலகத்தீரே ! உலகத்தீரே 1.
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்து
சாற்றக் கேண்மின் சாற்றக் கேண்மின்
மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை,

ஐம்ப திரவி லகலும் துயிலினால்
ஒட்டிய விளமையில் ஓரைந்து நீங்கும்
ஆக்கை இளமையி லெம்மூன்று நீங்கும்
எழுபது போக நீங்கியிருப்பன முப்பதே
அவற்றுள்
இன்புறு நாளும் சிலவே ; அதான்று,
துன்புறு நாளும் சிலவே ; ஆதலால்
பெருங்காற் றெத்தது செல்வம் ; பெருங்காற்
றிடிகரை யொத்த திளமை ; யிடிகரை
வாழ்மர மொத்தது வாழ்நாள் ; ஆதலால்
ஒன்றே செய்யவும் வேண்டும் ; ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும் ; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும் ; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டு மின்னும்
நாளை நாளை என்பீ ரானால்
நமனுடை முறைநாள் ஆவது மறியீர்
நம்முடை முறைநாள் ஆவது மறியீர்
எப்போ தாயினும் கூற்றுவன் வருவான்
அப்போ தந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமரொடும் போகான்
நல்லா ரென்னான் நல்குரவு அறியான்
தீயா ரென்னான் செல்வரென்று உன்னான்
தரியான் ஒருகணம் தறுக ணாளன்.



24. சப்மரீன் என்கிற நீர்மூழ்கிக் கப்பல்.

1. மனிதர் பிரயாணம் செய்வதற்குப் பலவித வாகனங்களை உபயோகிக்கிறார்கள். கடல் மார்க்கமாய்ப் பிரயாணம் செய்கிறவர்கள், கப்பல்களை உபயோகப்படுத்துகிறார்கள். அவை, தண்ணீரில் மிதந்து செல்லும் இயல்புள்ளவை. அவைகளிற் பலவகை யுண்டு. சில, வாயுவின் சகாயத்தால் நீரில் மிதந்து ஓடுவன; நீராவியினால் ஓடுவன வெல்லாம் நீராவிக்கப்பல்கள்; சில மின்சார சக்தியாலும் செல்லுகின்றன; இதுவரையிலும் மரக்கலங்கள் யாவும் நீரில் மிதந்து செல்வனவாகவே இருந்தன.

2. இப்பொழுது நீரில் மூழ்கிச் செல்லக்கூடிய கப்பலொன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதற்குச் சப்மரீன் என்று பெயர். அஃதாவது கடல் நீருக்குள் செல்லும் கப்பல் என்று பொருள்; ஆகையால் அதை முழுகும் கப்பல் என்பார்கள்.

3. சப்மரீன், மனிதர் கண்களுக்குத் தோன்றாமல் நீரில் மூழ்கி மறைந்து, ஒரு மீனைப் போல வெகு வேகமாய்ச் செல்லக்கூடிய ஆச்சரியமான கப்பலாகும். அதன் அமைப்பு மிகவும் விநோதமானது. பார்த்தால் அது மிகப் பெரியதொரு புகைச் சுருட்டைப் போலிருக்கும். காற்றாவது, நீராவது சிறிதும் உட்செல்லா வண்ணம் அது நன்றாய் மூடப்பட்டிருக்கும். அதன் பின்புறம் சற்று வட்டமாயும், கூராயும் இருக்கும். அது வேண்டும்போது கடலின்மீது மிதந்து செல்லவும், மற்றக் காலங்களில் கடல் நீரில் மூழ்கிச் செல்லவும் தகுதியாகக் கட்டப்பட்டிருக்கிறது. சப்மரீனில் ஏறிச் செல்லும் பிரயாணிகள், அதனுள்ளே செல்வதற்கு ஏற்ற வாயில், அதன் மேற்புறத்தில் அமைக்கப்பட்டிருக்கும்.

4. சப்மரீன், தண்ணீருள் மூழ்கிச் செல்லும்போது அதற்குள்ளிருக்கும் மக்கள் மூச்சு விடுவது எப்படி? மனிதர் காற்றைச் சுவாசியாமல் இருக்க முடியாது; ஆகையால், நாம் சுவாசிக்கும் சுத்தமான காற்றைப் பெரிய பீப்பாய்களில் அடைத்து முழுகும் அந்தக் கப்பலில் வைத்திருப்பார்கள். இப்படி அடைத்து வைத்திருக்கும் காற்றைக் கொஞ்சகொஞ்சமாய் அவர்கள் திறந்துவிடுவார்கள். அக்காற்று, கப்பல் முழுவதையும் நிரப்பிவிடும். அதனால் அக் கப்பலிலுள்ள மக்கள் சுத்தமான காற்றைச் சுவாசிக்க முடிகிறது; ஆகையால் கப்பலிலுள்ள மக்கள் சுகமாயிருக்கிறார்கள்.

5. சப்மரீன், வேண்டும்போது நீரில் மூழ்கவும் மற்றக்காலத்தில் மிதக்கவும் கூடுமென்று சொன்னேமல்லவா; அஃது எப்படி? அதற்கென்று தனி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சப்மரீனிற் சில அறைகள் காலியாக அமைக்கப்பட்டிருக்கும். அக்கப்பல் நீருள் முழுகவேண்டுமா

ஞல் அந்த அறைகளைத் திறந்துவிடுவார்கள். உடனே அவ்வறைகள் ஜலத்திஞல் நிரம்பும். நிரம்பிய ஜலத்தின பளுவிஞல் கப்பல் தண்ணீரில் வேண்டிய அளவுக்கு முழுகிவிடும். அப்பால் கப்பலை ஓடச் செய்வார்கள். கப்பல் வெகு வேகமாக முன்னேக்கிச் செல்லும். சப்மரீன் நீரின் மேலே வரவேண்டுமாஞல் அவ்வறைகளிலுள்ள ஜலத்தை வெளிப்படுத்துவார்கள். அதஞல் சப்மரீனுடைய கனம் குறைந்துவிடும்; அப்பொழுது அது தானே மேலே வந்துவிடும்.

6. சப்மரீன் கடலில் மூழ்கிச் செல்லும்போது எப்புறத்திலும் நீர் சூழ்ந்து இருக்குமல்லவா? அப்படியிருக்கும்போது உள்ளே அறைகளிலிருக்கும் நீரை எப்படி வெளிப்படுத்துவது? அதைக் காற்றின் உதவிகொண்டு வெளிவரச் செய்கிருர்கள். பீப்பாய்களில் அடைத்து வைத்திருக்கும் காற்றைத் திறந்துவிட்டால் அக்காற்று மிக்க வேகமாய் வெளிப்பட்டு, அறைகளிலுள்ள ஜலத்தை வெளியே தள்ளிவிடுகிறது. ஆகவே பீப்பாய்களில் அடைத்து வைத்திருக்கும் காற்று, பிரயாணிகள் சுவாசிப்பதற்கும், சப்மரீன் கனத்தைக் குறைத்து மேலே எழும்பச் செய்வதற்கும் உபயோகப்படுகிறது.

7. சப்மரீன்கள் நீரில் மூழ்கிப் பகைவருடைய கப்பல்களைத் துளைத்துச் செல்லுகின்றன. அவைகளிலிருந்து கப்பல்களை மூழ்குவிக்கக் கூடிய கொடிய ஆயுதங்களும் குண்டுகளும் வெளிப்பட்டு, கப்பலின் அடிப் புறத்தைத் துளைத்துவிடுகின்றன. இக்காரணத்தால் நீர் உள்ளே சென்று கப்பல்களை மூழ்கச் செய்கின்றது. குண்டுகளை எறிவதற்கும் பீப்பாய்களில் அடைத்து வைத்திருக்கும் காற்றையே உபயோகிக்கிருர்கள்.

8. சப்மரீன்கள் ஜலத்தில் மூழ்கிச் செல்லுகின்றன அல்லவா? அவற்றுள்ளிருக்கும் மக்கள் வெளியில் நடக்கும் செய்திகளைத் தெரிந்துகொள்வதற்காக ஓர் உபாயம் செய்திருக்கிறார்கள். அக்கப்பலின் நடுவில் எஃகினாற் செய்யப்பட்ட ஒரு பெரிய குழாயை நிறுத்தியிருக்கிறார்கள். அது பார்வைக்கு ஒரு பெரிய தூண்போலவிருக்கும். அதற்குள் சில கண்ணாடிகள் வைக்கப்பட்டிருக்கும். அந்தக் குழாய் நீர்மட்டத்திற்கு மேலேயிருந்தால், நாற்புறமும் நடக்கும் எல்லாச் செயல்களும், பிற எல்லாத் தோற்றங்களும் உள்ளே இருக்கிறவர்களுக்கு நன்றாய்த் தெரியும். அந்தக் குழாய் தண்ணீரில் மூழ்கி மறைந்து போனால் கப்பலிலுள்ளவர்க்கு ஒன்றுமே அப்பொழுது தெரியாது.

9. சப்மரீன்கள் மனிதருக்கு எப்பொழுதும் ஆபத்தை உண்டாக்கத் தக்கவை. அவைகளை உபயோகிப்பவர்கள் மிக்க ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அவை நீரில் மூழ்கிச் செல்லும்போது, நீரின் மேலே கப்பல் ஒன்று சென்று அவற்றின் குழாயைத் தாக்கிச் சேதப்படுத்துமாயின், உடனே அவை ஜலத்தில் மூழ்கிச் சமுத்திரத்தின் அடியிற் போய்ச்சேரும். அவற்றிலுள்ள மக்கள் அனைவரும் இறக்கநேரிடும். ஆகையால் சப்மரீன்களை ஓட்டுகிறவர் தேர்ந்த நிபுணராயிருத்தல் வேண்டும்.

10. சப்மரீன் பகைவரை அழிப்பதற்கு ஏற்ற கருவியே தவிர, பிரயாணத்திற்குத் தக்க சாதனமன்று; ஆதலால் பிரயாணிகள் அதை அதிகமாக உபயோகப்படுத்துவதில்லை. யாருக்கும் தெரியாமல் நீரில் முழுகிப் பகைவருடைய கப்பல்களை நாசஞ்செய்வதில் அதற்கிணையான கருவி வேறொன்றுமில்லை.

———

25. குமணன்.

1. முற்காலத்திலே நமது தமிழ்நாட்டில் இரப்பவர்க்கு இல்லையென்னாது, எப்பொழுதும் பொருள் கொடுத்து உதவின பல அரசர்கள் அரசு செலுத்தினார்கள்.



அவர்களிற் சிலர் எதையும் வைத்துக் கொள்ளாமல் தமக்குள்ள எல்லாப் பொருள்களையும் தானம் செய்து மிக்க புகழ் பெற்றவர்கள். அவர்களுக்கு 'வள்ளல்கள்' என்று பெயர்; வள்ளல்கள் என்றால் வரையாது கொடுப்பவர்கள் என்று பொருள். அவ்வள்ளல்களை முதலெழுவள்ளல், இடையெழுவள்ளல், கடையெழுவள்ளல் என மூன்றுவகுப்புக்களாகப் பிரித்திருக்கின்றார்கள். கடையெழு வள்ளல்களுள் குமணன் என்னு மரசனும் ஒருவன்.

2. குமணன் முதிரமலையை யடுத்த ஓர் வளமுள்ள நாட்டை ஆண்ட அரசன். அவன் நல்ல கல்வியறிவுடையவன். வித்துவான்களைச் சிறிதும் மனம் கோணாது ஆதரித்தவன். அவனுக்குத் தம்பியொருவன் இருந்தான். அவன் குமணனுக்கு முற்றிலும் மாறாகிய குணங்களை யுடைய

வன்; பொறுமையே உருவாய் அமையப் பெற்றவன் ; அவனுக்கு இளங்குமணன் என்று பெயர்.

3. குமணனுடைய பெரும் புகழைக்கண்டு இளங்குமணன், பொறுமையடைந்து பல சூழ்ச்சிகளைச் செய்து அவனைக் காட்டுக்கு ஓட்டிவிட்டான் ; குமணன், தன் பொருள்களையும் இராஜ்ஜியத்தையும் இழந்து காட்டையே தன் உறைவிட மாக்கிக்கொண்டான். நஞ்சினும் கொடிய சிந்தையுடையவனாகிய இளங் குமணன், தமையன் உயிரோடிருப்பின் மீண்டும் தன் நாட்டை அடைய முயற்சி செய்வானென்றெண்ணி, அவனைக் கொல்வதற்கும் ஏற்பாடுகள் செய்தான். முடிவில் அவன், குமணனுடைய தலையை வெட்டிக் கொண்டுவந்து கொடுக்கிறவருக்குக் கோடிப்பொன் கொடுப்பதாக, தன் நாடெங்கும் பறை அறைவித்தான். அது காட்டில் வசித்த குமணன் காதுக்கும் எட்டிற்று.

4. குமணனுடைய கொடைத்திறனும், குணமும், நல்லொழுக்கமும் அந்நாட்டு மக்கள் யாவர்க்கும் தெரியும். ஆதலால் ஒருவரும் அக்கொடிய செயலைச் செய்ய முற்படவில்லை. இளங்குமணன் சிந்தையைக் கண்டு அனைவரும் வெறுத்தனர். குமணன் “ இனிது இனிது ஏகாந்தம் இனிது” என்னும் ஔவை வாக்குப்படி காட்டிலேயே தனியாக வசித்து வந்தான்.

5. அக்காலத்தில் பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் ஒருவர் இருந்தார். அவர் வறுமையால் மிக்க வருத்தமடைந்து கொண்டிருந்தார். அவர் குமணனைக் கண்டு பரிசில் பெற்றுத் தம் வறுமையைப் போக்கிக் கொள்ள எண்ணி அவனுடைய நாட்டுக்குச் சென்றார். சென்றவர் குமணனை அவனுடைய தம்பி, காட்டுக்கு ஓட்டி விட்டானென்று கேள்விப்பட்டு மிக்க விசன

மடைந்தார். பின்பு அவனைக் காணக் கருதிக் காட்டுக்குச் சென்றார்.

6. புலவரைக் கண்டவுடன் குமணன் எழுந்து நமஸ்காரம் செய்து தக்கபடி உபசரித்து, "ஐயா, தாங்கள் என்னைத் தேடிவர நான் முற்பிறப்பில் என்ன தவம் செய்தேனோ"? என்று இனிமையாய் முகமன் கூறி வரவேற்றான்; புலவர் மிக மகிழ்ந்து தாம் அடைந்திருக்கும் வறுமை நிலையைக் கூறினார்.

7. அதுகேட்ட குமணன் மிகவும் விசனமடைந்தான். புலவர் வறுமையைப் போக்கத் தன் கையில் பொருள் ஒன்றும் இல்லை என்பதே அவன் வருத்தத்திற்குக் காரணம். தன் தம்பி தன் தலையைக் கொண்டு வருகிறவருக்கு ஆயிரம் பொன் கொடுப்பதாகப் பறை யறைவித்தது அப்போது ஞாபகத்திற்கு வந்தது. உடனே அவன் புலவரைப் பார்த்து,

"அந்தநாள் வந்திலீர் அருந்தமிழ்ப் புலவீர்
இந்தநாள் வந்துநீர் நொந்தெனை அடைந்தீர்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றும் வறுமைநோய் களைமின்"

என்று கூறித் தலையை வெட்டிக்கொண்டு போகும்படி, தன் உடைவாளை எடுத்துப் புலவர் கையிற் கொடுத்தான்

8. அதுகேட்ட புலவர் மனம் பதைத்தார்; பெருவள்ளலாகிய குமணன் தலையை வாளால் வெட்ட அவர் ஒப்புக் கொள்வாரா? கொடுத்த வாளை வாங்காது மறுத்தால் குமணன் தானே தன் தலையை வெட்டிக் கொண்டாலும் கொள்ளலா மென்று பயந்து புலவர் வாளை வாங்கிக் கொண்டார். அப்பால் அவர் குமணனைப் பார்த்து "நிலையற்ற இச் செல்வத்தின் பொருட்டா, உன் தலையை வெட்டும்படி

சொன்னாய். அதைப் போலும் பழி இவ்வுலகில் வேறுண்டோ? உன் தலை எனக்கு வேண்டுமாயின் நான் வேண்டும் போது தெரிவிப்பேன்; அதுவரையிலும் நீ அதைக் காப்பாற்றி வரவேண்டும்'' என்று கூறி அவன் புகழைப் பலவாறு சிறப்பித்துப் புகழ்ந்தார்.

9. அப்பால் அவர் குமணனிடத்தில் விடைபெற்றுத் திரும்பினார். திரும்பினவர் மாந்தை என்ற ஊருக்குச் சென்றார். அங்கு, அரசருக்குக் கிரீடங்கள் செய்கிறவன் ஒருவனிருந்தான். அவன் சித்திர வேலை செய்வதில் மகா சமர்த்தன். அவனைக்கொண்டு, குமணனது தலையைப்போல் ஒரு தலை செய்வித்தான் அந்தத் தலை, எல்லா வகையாலும் குமணன் தலையை ஒத்திருந்தது. புலவர் அத் தலையை வாங்கிக்கொண்டு வாளோடுகூட இளங் குமணன் அரண்மனைக்குச் சென்றார்.

10. வாயில் காப்போன், "யாரோ ஒருவர் தலையொன்றைக் கொண்டு வந்திருக்கிறா'' ரென்று, அரசனுக்குத் தெரிவித்தான். அதைக்கேட்ட இளங்குமணன் பெருமகிழ்ச்சி கொண்டு புலவரை உள்ளே அழைப்பிக்க, அவர் சென்று தலையையும் வாளையும் அவன் கையிற் கொடுத்தார். தலையைப் பார்த்தவுடன் அவன் இதயம் துடிக்க ஆரம்பித்தது. 'என் செய்தேன்! என் செய்தேன்! என் சகோதரனுடைய தலையைக் கொய்யச் செய்தேனே' என்று மனம் பதைத்தான்; அலறி அழுதான். 'அடே, கொலைபாதகா!' என்று புலவரைக் கடிந்துரைத்து அவரை வெட்ட முயன்றான். அங்குள்ள மந்திரி முதலியோர் அவனைத் தடுத்துவிட்டனர். உடனே அவன் தரையில் வீழ்ந்து மூர்ச்சையடைந்தான். 'உதிரம் உறவறியும்' என்னும் பழமொழி அவனிடம் மெய்யாயிற்று.

11. இளங் குமணன் சிறிது தெளிவடைந்த பின்னர், புலவர் அவனைப்பார்த்து "அரசே, வருந்தவேண்டா. நான் குமணனை மறுபடியும் உயிர்ப்பிக்கக் கூடியவன். நீர் எனக்கு என்ன இனும் கொடுப்பீர்" என்றார். அதுகேட்ட இளவல், "நான் என் தமையனை மீண்டும் இவ்வுலகிற் காணும் பாக்கியத்தைப் பெறுவேனாகில், உமக்குக் கோடி பொன் தருவேன்" என்றான். உடனே, புலவர், "அரசே! நீர் சிறிதும் அஞ்சவேண்டா; உண்மையாய் உமது தமையனாரை உமக்கெதிரே நிறுத்துகிறேன் பாரும்"; என்றார். அது கேட்ட இளங் குமணன், "என் முன்னோனைக் காண் பேனாகில் உடனே அரசை அவரிடத்தில் ஒப்பித்து அவரிட்ட வேலையைச் செய்து உயிர்வாழத் தயங்கேன்" என்றான்.

12. உடனே புலவர் குமணவள்ளளிடத்திற் சென்று நடந்தவற்றை யெல்லாம் சொன்னார். அது கேட்ட குமணன், "காட்டில் ஏகாந்தமாய் வசித்தல் நலம் பயக்குமென நான் நினைத்தேன், நாட்டிற்கு மீண்டும் வருதல் பெருந் துன்பத்தை விளைக்கும்" என மறுத்தும், புலவர் "வரத் தான் வேண்டும்" என வற்புறுத்தினர். ஆகையால் குமண வள்ளல் திரும்பவும் புலவரோடு நாடு சென்றார். இளங் குமணன் அவரைப் பல விருதுகளுடனும், வாத்தியங்களுடனும் எதிர்கொண்டு வரவேற்று மார்புறத் தழுவிப் பரவசமடைந்து அரசுரிமையை அவரிடத்தில் ஒப்பித்துவிட்டான். அவர் இளங் குமணனை இளவரசாகப் பட்டங்கட்டி முன் போல நீதி வழுவாது செங்கோல் செலுத்தி வந்தார். குமணனுடைய கொடைத்திறம் மற்றெல்லா வள்ளல்களுடைய கொடைத் திறத்தையும்விட மேலானதென்று நமக்குத் தெரிகிறதல்லவா?

---

26. தெய்வ வணக்கத்துக் குரிய பாக்கள்.

விநாயகர்.

1. அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற் றிற் [பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம் போம்—நல்ல
குணமதிக மாம்அருணைக் கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்.

2. சிந்தா குலம்தீரும்; செய்கருமம் கைகூடும்; [மத்
சந்தானம் என்றும் தழைத் தோங்கும்;—பைந்தா
தானைவயத் தானைமலைப் பாவையளித் தானைமகத்
தானைமுகத் தானைநினைத் தால்.

முருகன்.

1. மூவிரு முகங்கள் போற்றி;
முகம்பொழி கருணை போற்றி;
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி; காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி; அன்னான்
சேவலும் மயிலும் போற்றி;
திருக்கைவேல் போற்றி போற்றி.

2. நாளென் செயும்; வினை தானென்
செயு மெனை நாடிவந்த
கோளென் செயும்; கொடும் கூற்றென்
செயும்; குமரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்
னேவந்து தோன்றிடினே.

கலைமகள்.

கலைபயின்ற உளத்திருக்கும் கரும்பினை முக்
கனியை, அருட் கடலை ஒக்கும்
நிலைபயின்ற முனிவரரும் தொழுதேத்த
நான்முகனுர் நீண்ட நாவில்
தலைபயின்ற மறைபயின்று மூவுலகும்
காக்கின்ற தாயை வாகைச்
சிலைபயின்ற நுதலாளைக் கலைவாணி
அம்மையை நாம் சிந்திப் போமே.

செய்யுட் பாடம்

27. ஔவையார் அருளிச் செய்த

வாக்குண்டாம் என வழங்குகிற

மூதுரை

1. *நன்றி யொருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி*
என்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.

2. *நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரங்*
கல்மே லெழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர்.

3. *அட்டாலும் பால்சுவையிற் குன்ரு தளவளாய்*
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

4. உற்ற விடத்தி லுயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ—கற்றூண்
பிளத்திறுவ தல்லாற் பெரும்பாரம் தாங்கில்
தளர்ந்து வளையுமோ தான்.

5. நீரளவே யாகுமாம் நீராம்பல்; தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு;—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்;
குலத்தளவே யாகும் குணம்

6. நல்லாரைக் காண்பதுவு நன்றே; நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே;—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

7. தீயாரைக் காண்பதுவும் தீதே; திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே;—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே; அவரோடு
இணங்கி இருப்பதுவுந் தீது.

8. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்;—தொல்லுலகில்
நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை.

9. பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்;—கொண்டபே
ராற்ற லுடையார்க்கு மாகா தளவின்றி
யேற்ற கருமஞ் செயல்.

10. மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரும் ஆகாது அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்.

11. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம்.

12. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

13. வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகார மானாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மே லிட்ட கலம்.

14. அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு.

15. அற்ற குளத்தி லறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்; அக்குளத்தில்
கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு.

16. சீரியர் கெட்டாலும் சீரியர் சீரியர் மற்று
அல்லாதார் கெட்டாலங்குஎன்னாகும்;—சீரிய
பொன்னின் குடமுடைந்தால் பொன்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால் [என்னாகும்

17. உடன் பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி—உடன் பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணி தீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு.

7. பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சை பலசொல்லி இடித்துண்கை—சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது
உயிர் விடுகை சாலவுறும்

8. தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணம் கொடை [யால்
கண்ணீர்மை மாறுக் கருணையால்—பெண்ணீர்மை
கற்பழியா வாற்றல் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி.

9. பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் எனவேண்டா;—மற்றோர்
இரணம் கொடுத்தால் இடுவர்; இடாரோ
சரணம் கொடுத்தாலும் தான்.

10. சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல் [கடந்து
பாவித்துப் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப் [பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்

11. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்த
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்கு
ஆவிதான் போயினபின்பு ஆரோ அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்.

12. ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்

PRINTED AT THE LAW PRINTING HOUSE, MADRAS.